3,4,8

# சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வியும்

## ஆசிரியர் ஆலோசகர்களுக்கான கைந்நூல்

தேசிய கல்வி நிறுவகம்
சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விக்கான
செயற்றிட்ட வெளியீடு

ஐக்கிய நாடுகளின் ஆதரவு - சனத் தொகை நிதியம் UNFPA

# சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வியும்

## ஆசிரியர் ஆலோசகர்களுக்கான கைந்நூல்

நாவலர் மகா வித்தியாலயம் யாழ்ப்பாணம்

தேசிய கல்வி நிறுவகம்
சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விக்கான செயற்றிட்ட வெளியீடு

ஐக்கிய நாடுகளின் ஆதரவு - சனத் தொகை நிதியம்

# பணிப்பாளார் நாயகத்தின் செய்தி.......

பாடசாலைப் பாட விதானத்தில் இணைத்துக் கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட பாடப் பகுதி தொடர்பாக ஆசிரியர்கள் அறிவினையும் பயிற்சியையும் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

1973ஆம் ஆண்டு பாடசாலைப் பாடவிதானத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சனத்தொகைக் கல்வியின் வளர்ச்சியாகத் தற்போது சனத் தொகைக்கும் குடும்ப வாழ்கைக்குமான கல்வி செயல்படுத்தப்படுகிறது. இப்பாடவிடயங்கள் விஞ்ஞானம், சுகாதாரக்கல்வி, சமூகக்கல்வி ஆகிய பாடவிடயங்களுடன் கற்பிப்பதற்கான இணைக்கப்படுகிறது. மேலும் ஆசிரியர் ஆலோசகர்கள் பயிற்சி பெறுவதற்கு விதிக்கப்பட்ட ஒன்றாக அமைகின்றது. ஆசிரியர் ஆலோசகர்கள் தங்களது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆசியரிர்களைக் பயிற்றுவிப்பதற்கு பயன்பாடு உடையதாக இக்கைந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கைந்நூலானது மனப்பாங்கு வளர்சிக்கும் சரியான அறிவைக் கட்டியெழுப்புவதற்கும் பயனுள்ளதாக அமையும் எனக் கருதுகிறேன்.

இக் கைந்நூல் பிரேதேச மட்டத்தில் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கு மேற் கொள்ளப்படும் செயலமர்வுகள் பெரும் அளவில் வெற்றியடைய உபயோகமாக விருக்கும் என எண்ணுகிறேன்.

ஆசிரிய கைந்நூலைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த குழுவுக்கு எனது நன்றிகள் உரித்தாகுக.

**கலாநிதி பி. உடகம**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

| | | | |
|---|---|---|---|
| ஆலோசகர்கள் | :- | கலாநிதி பிரேமதாஸ உடகம | - பணிப்பாளர் நாயகம் தேசிய கல்வி நிறுவகம் |
| | | கலாநிதி ஏச்.டி.எல் அமரகுணசேகர | - பிரதிப்பணிப்பளார் நாயகம் தேசிய கல்வி நிறுவகம் |
| | | திருமதி. ஆர்.சி.ஜெயவர்த்தனா | - பணிப்பாளர், சனத்தொகை குடும்ப வாழ்கைக்கல்விச் செயற்றிட்டம். |
| | | திருமதி.எச்.ரணதுங்கா | |
| எழுத்தளார் | :- | திரு. எச்.வி.சி திசாநாயக்கா | - தேசியக் கல்வி நிறுவகம் சனத் தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வித்திட்டமும். |
| | | திருமதி ஹேமமாலினி ரூபசிங்க | - தேசிய கல்வி நிறுவகம் சனத் தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வித்திட்டமும் |
| | | செல்வி.லிசி தெல்பசித்திரா | - தேசியக் கல்வி நிறுவகம் சனத் தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வித்திட்டமும் |
| | | திருமதி மித்தா விரக்கோடி | - தேசியக் கல்விநிறுவகம் சனத் தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வித்திட்டமும் |
| | | திருமதி சுமனா சுகததாஸா | - தேசிய கல்வி நிறுவகம் சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வித்திட்டம் |
| இணைப்பு | :- | செல்வி லிசி தெல்பசித்திரா | - தேசியக்கல்வி நிறுவகம் சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வித்திட்டமும் |

| | |
|---|---|
| செயல்திட்ட உதவிச் செயல்பாடு | திருமதி சமுத்திரா தராடகும்பற |
| அலுவலக உதவியாளர் | திரு. பிரியந்த அத்துல முதலி |
| தமிழ்மொழி பெயர்ப்பு | ஜனாப் எம்.எச்.எம். ஹசன் |
| | திரு. கே. ரி. கனகரத்தினம் |
| பதிப்பாசிரியர் | திரு. கே. ரி. கனகரத்தினம் |

# சனத்தொகையும் குடும்ப வாழ்கைக் கல்வியினதும் அவசியம்

## சனத்தொகையும் குடும்பவாழ்க்கை கல்வியும் என்றால் என்ன?

சனத்தொகை குடும்ப வாழ்க்கைக் கல்வியை வழங்குதல் மூலம் முக்கியமாக எதிர்ப்பார்க்கப்படுவது என்னவெனில் ஒருவர் சுயமாக சிந்தித்து தமது வாழ்க்கை பற்றிய தீர்மானங்களைப் பொறுப்புடன் மேற்கொள்வதற்கும் அவற்றை நடைமுறைப் படுத்துவதற்குமான உடல், மன வெழுச்சி சமூக, உள விருத்தியைக் ஏற்படுத்துவதற்கு உதவ வேண்டுமென்பதாகும். அத்துடன் மரபு ரீதியாக பாதுகாக்கப்பட்ட வரும் விழுமியங்களை அன்றாட வாழ்கையில் பெற்றுக்கொள்ளும் விழுமியங்களுடன் ஒப்பிட்டு வாழ்கைக்கு பொருத்தமான சரியான விழுமியங்களையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு இக்கல்வி பெரிதும் உதவும்.

## இன்றைய சமுதாயம்

திறந்த பொருளாதாரம்; சர்வதேச, உள்நாட்டு குடியகல்வுகள்; யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்தல் தொடர்புச்சாதனங்களின் தாக்கம்; சுற்றாடல் சுகாதாரப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு காரணங்களால் இன்றைய சமுதாயம் விரைவானதும் எதிர்பாராதுமான மாற்றங்களுக்கு உட்பட்டு வருகிறது. இப்பின்னணியில் கட்டிளமைப் பருவத்தினரிடையே தற்கொலை உளச் சோர்வு, போதைப் பொருள் பாவனை, இளவயதில் கர்ப்பம் தரித்தல், கர்ப்பச் சிதைவு, பாலியல் நோய்கள் என்பன அதிகரித்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது விவாக வயது தாமதிக்கும் போக்கும் இந்நிலைமைகளில் பாதிப்புச் செலுத்தும் ஒரு அம்சமாக இடம் பெறுகிறது.

## ஆய்வுத் தகவல்கள்

இக் கல்வியை முறையாக பாடசாலைக் தொகுதிக்குள் கொண்டு செல்வதற்கு ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்கென இலங்கையின் சகல பாடசாலைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு மாதிரியின்கீழ் நிர்வாகிகள், அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் (6-11) பெற்றோர்கள் போன்ற எல்லாக் குழுக்களிடமிருந்தும் இத்துறைக்குரிய அறிவு, திறன் மனப்பாங்கு பற்றிய தகவல்கள் பெறப்பட்டன. கேள்விக் கொத்துகள் மூலமும், நேரடிக் கலந்துரையாடல் மூலம் இத்தகவல்கள் பெறப்பட்டன. இவ்வாய்வு மூலம் பெறப்பட்ட சில தகவல்கள் பின்வருமாறு:

இத்துறைசார்ந்த அறிவு மட்டங்களுக்கிடையில் நகரம் கிராமம் என்ற ஒரு வேறு பாட்டைக் காண முடிந்தது. எண்ணக்கருக்கள் பற்றிய அறிவுமட்டும் நகர்ப்புற மாணவர்களைவிட கிராமப்புற மாணவர்களிடம் உயர்ந்த தரத்தில் காணப்பட்டது.

★ தரம் 1 பாடசாலை மாணவர்களைவிட தர 2 வகை பாடசாலை மாணவர்களிடம் எண்ணக்கரு பற்றிய விளக்கம் திருப்தியாக காணப்பட்டது. இத்துறை சார்ந்த அறிவு மட்டத்தில் மிகக் குறைந்த தரங்களை வெளிப்படுத்தியவர்கள் AB தரப்பாடசாலைகள் சார்ந்த நகர்ப்புற மாணவர்களாகும்.

★ ஆபத்தான நடத்தைகளில் ஈடுபடுவதும், அத்தகைய நடத்தைகளைக் பரிட்சித்துப் பார்ப்பதுமான போக்கு இலங்கை பூராவிலுள்ள பாடசாலை மாணவர்களிடம்

பொதுவாக காணப்படுகிறது. இக்கோலத்தில் மாவட்டங்களில் சில வேறுபாடுகளும் காணப்பட்டன எனினும், பொதுவாக நோக்கும் இடத்து அகில இலங்கையிலும் ஆண்டு 8 மணாவர்களிடம் இப்போக்கு குறைவாகவே காணப்பட்டது. ஆண்டு 11 வரை இப்போக்கு அதிகரித்துச் செல்லும் தன்மையினை காட்டியது. கட்டிளமைப்பருவ மாணவர்கள் உணர்ச்சி உளச்சோர்வு நிலைகாரணமாக இத்தகைய நடத்தைகளுக்கு உட்படுகின்றார்கள் என எண்ண இடம் உண்டு.

★ தகவல்களைக் பெற்றுக் கொள்வதும் ஆலோசனைகள் பெறுவதும் தொடர்பாக கேட்கப்பட்ட வினாக்களின் விடைகளிலிருந்து தனிப்பட்ட ரீதியில் ஆசிரியர்களிடமிருந்து பாடசாலை மூலம் பெறுவதில் மாணவர்கள் அக்கறை காட்டினர். எனினும் அத்தகைய பணியை நிறைவேற்றுவதற்கு அல்லது மாணவர்களின் நடத்தைக்கு சிறப்பான துலங்களை வழங்குவதில் பாடசாலைகள் சரியான பங்களிப்பினை வழங்கவில்லை என்பதும் தெளிவானது. அத்துடன் ஆபாச நூல்கள் வாசிப்பது திரைப்படங்கள் பார்ப்பது தொடர்பான நடத்தைகள் பற்றி வெளியான தகவல்களிலிருந்து அத்தகைய தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுவது தெரிய வந்துள்ளது.

★ மாணவர்கள் மனப்பாங்கு பற்றிய துலங்கலைக் ஆய்வு செய்த போது கிடைத்த முக்கிய தகவல்கள் யாதெனில் குடும்ப அலகு முறிவடைந்து தொடர்பாக மாணவர்களிடயேயுள்ள ஈடுபாடும் கவலையுமாகும். பெற்றோர்களிடமிருந்து கிடைத்த தகவல்களின்படி அத்தகைய தகவல்களைப் வழங்கும் ஆற்றல் பற்றிய நம்பிக்கை அவர்களிடமில்லை. அத்துடன் ஆய்வின் மூலம் தெளிவான இன்னொரு முக்கிய தகவல், பிள்ளைகளிடம் சமூகமயாகும் செயலொழுங்கில் சாதகமான பங்குபற்றலில் பெற்றோர்களிடமுள்ள தகுதியீனமாகும்.

## தேவை:

மேற்படி தகவல்களின்படி இன்றைய பிள்ளைகள் சிக்கலானதும் சவால்கள் நிறைந்ததுமான ஒரு சமூகத்தில் வாழ்கின்றார்கள் என்பது தெளிவாகிறது. அவர்களுக்கு பிழையான தகவல்களை வழங்கும் வழிகள் ஏராளமாக உண்டு. தேவையான அறிவையும் வழிகாட்டலையும் வழங்குவதற்கு குடும்பங்கள் வலுவினை பெறவில்லை குடும்ப அலகு முறிவடைந்தமை நிலைமையைக் மேலும் சிக்கலாக்கியுள்ளது. பிள்ளைக்குத் தேவையான அறிவைக் வழங்க பெற்றோரின் ஆற்றல்கள் போதுமானதாக இல்லை. மாணவர்களுக்கு பாடசாலை மூலம் அறிவூட்டுவது தொடர்பாகவும், பெற்றோர்களுக்கு இருக்கும் விளக்கமும் போதுமானதாக வில்லை. எனினும் பிள்ளைகளுக்கு பாடசாலை மூலம் அறிவு வழங்குவது தொடர்பாக பெற்றோர்களிடம், சாதகமான மனப்பாங்கு நிலவுகிறது.

இல் பின்னணியின்கீழ் பாடசாலைப்பாட விதானத்துனூடாக இத்துறை சார்ந்த அறிவை மாணவர்களுக்கு வழங்குவது காலத்தின் தேவையாகும். வாழ்கைக்குத் தேவையான செயல்முறை மூலமானதும் பயனுள்ளதுமான அறிவைக் வழங்குவதற்காக வழங்கப்படும் ஆசிரியர் பயிற்சியும் அது போன்றே முக்கியமானதாகும்.

பெற்றோருக்கு அறிவூட்டுவதன் மூலம் இவ் முயற்சிக்கு மேலும் வலுவூட்டமுடியும்.

**திருமதி ஆர். சி. ஜெயவர்த்தனா**
செயல்த்திட்டப் பணிப்பாளர்

# பொருளடக்கம்


1.00 பாட உள்ளடக்கம்

1.1 சனத்தொகைப் பரம்பலியல்-அடிப்படை எண்ணக்கரு 9 - 15

1.2 சனத் தொகை வேறுபாடு 16 - 20

1.3 சனத் தொகையும் வாழ்க்கை நலன்களும் 21 - 24

1.4 குடும்ப அலகு 25 - 27

1.5 பொறுப்புள்ள பெற்றோர்கள் 28 - 32

1.6 கட்டிளமைப்பருவம் 33 - 37

2.00 பாடவிடய ஒன்றிணைப்பு 38

2.1 பாட விடயங்கள்-சமூகக்கல்வி 38 - 48

2.2 பாடவிடயங்கள்-விஞ்ஞானம் 49 - 50

2.3 பாட வியடங்கள்-சுகாதாரம் 51 - 55

3.00 இனப் பெருக்க சுகாதாரம் கற்பிக்க உபயோகிக்ககூடிய உருக்கள் 57 - 73

4.00 சனத்தொகை குடும்பவாழ்க்கை கல்விச் செயலமர்வுகளில் பாடசாலை நடைமுறைப்படுத்தக் கூடிய செயற்பாடுகள் 74

5.00 மதிப்பீடு 75

5.1 வரலாறும் சமூகக்கல்வியும் 75 - 76

5.2 விஞ்ஞானம் 77

6.0 பிரதேச ரீதியான செயலமர்வுகளில் கவனிக்கப்பட வேண்டியவை 78

7.0 பாடத்திட்டம் 79 - 80

# 1.0 பாட உள்ளடக்கம்

## 1.1 சனத்தொகை பரம்பலியல் எண்ணக்கருக்கள்

### சனத்தொகை

ஒரு குறிப்பிட்ட நிலப் பிரதேசத்தில் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் வாழும் தனியாட்களின் எண்ணிக்கை சனத்தொகை எனப்படும். எந்த ஒரு நாட்டின் சனத் தொகையிலும் மூன்று காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. அவை பிறப்பு, இறப்பு, குடிபெயர்வு என்பனவாகும்.

ஒரு சனத் தொகை மதிப்பீட்டின் மூலம் சனத்தொகை அளவுகள் கணிப்பிடப்படுகின்றது.

குறிப்பிட்ட காலப்பிரிவில் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில் வாழும் குடித் தொகையினரை கணக்கிடுவதே சனத்தொகை மதிப்பீடு எனப்படும். இலங்கையில் முதன் முதல் சனத் தொகை மதிப்பீடு செய்யப்பட்டது 1871 ஆண்டிலாகும். பத்து ஆண்டுக் கொருமுறை இக்கணிப்பீடு நிகழ்கின்றது. இலங்கயில் 1981 ஆம் ஆண்டே இறுதியாக சனத்தொகை மதிப்பிடச் செய்யப்பட்டது. 1871–1981 காலப்பிரிவில் இலங்கையின் சனத்தொகை ஏழு மடங்காக அதிகரித்துள்ளது. எதிர்காலத் திட்டமிடல் அமுலாக்க நடவடிக்கைகளுக்கு சனத்தொகை மதிப்பீடு முக்கியமானதாகும்.

### சனத்தொகை அமைப்பு

பிறப்புரீதியான சில பண்புகளை வைத்து சனத் தொகை வகைப் படுத்தப்படுகின்றது. அது அமைப்பு ரிதியிலானது உதாரணமாக வயது ரீதியாக பால் ரீதியாக சனத்தொகை அமைப்பை வகைப்படுத்தலாம்.


### சனத்தொகை வீதாசாரம்

இனரீதியாக தொழில் ரீதியாக, பிரதேச ரீதியாக வகைப்படுத்தல் இதில் அடங்கும்.

உ+ம் இனம்/சமயம்/ நகர/ கிராமம் போன்ற எந்த ஒரு பண்பையும் இதற்காக உபயோகிக்கலாம்.

## இலங்கையின் நிர்வாக மாவட்ட அடிப்படையில் சனத் தொகைப் பரம்பலைக் காட்டும் தேசப்படம்

1981 இனரீதியான பரம்பலும்




(மூலம் இராஜாங்க அமைச்சு) தேசப்பட இல 3

### சனத்தொகை விகிதாசாரம்


**இன அடிப்படையில்**

| | |
|---|---|
| சிங்களவர் | 74% |
| இலங்கைத் தமிழர் | 12.6% |
| முஸ்லீம்கள் | 7.1% |
| இந்திய தமிழ் | 5.6% |
| பறங்கியர் மலே | 0.7% |

**சமய அடிப்படையில்**

| | |
|---|---|
| பௌத்தர்கள் | 69.3% |
| இந்துக்கள் | 15.5% |
| முஸ்லிம்கள் | 7.6% |
| ரோமன் கத்தோலிக்க | 6.8% |
| வேறு | 0.8% |

1871–1981 வரை இலங்கையின் சனத் தொகை வளர்ச்சி




ஆண்டு 7 சனத்தொகை கல்வி சமூக வாழ்க்கை அன்றும் இன்றும் என்ற நூலிருந்து

## குடி அடர்த்தி

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் சனத்தொகை இப் பெயர் பெறுகின்றது. உ+ ம் ஒரு சதுர கிலோமீற்றர், ஒரு சதுர மைல்

$$\text{அடர்த்தி} = \frac{\text{குறிப்பிட்ட மொத்த சனத்தொகை}}{\text{மொத்த நிலப்பரப்பு}}$$

இதன்படி குடியடர்த்தி குறைந்த, நடுத்தர அளவான, கூடிய என்ற மட்டங்களில் உள்ள மாவட்டங்களை அறிந்து கொள்ள முடியும்.

## சனத்தொகை வீதங்கள்

ஒரு பிரதேசத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் நிகழும் மாற்றங்களுக்கு ஏற்ப சனத்தொகை வீதம் கூடிக் குறையும் வீதம் என்பதால் இத்தகைய நிகழ்வுகள் என்ன தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

உ+ ம்

பிறப்பு வீதம் என்பது ஒரு குறிப்பிட்ட வருடத்தில் ஆயிரம் பேரில் நிகழும் பிறப்புகளின் எண்ணிக்கையாகும்.

$$\text{பிறப்பு வீதம்} = \frac{\text{மேலே குறிப்பிட்ட வருடத்தின் பிறப்பு எண்ணிக்கை}}{\text{குறிப்பிட்ட நடு ஆண்டுச் சனத் தொகை}} \times 1000$$

கொழும்பு மாவட்டத்தின் 1993ஆம் ஆண்டின் பிறப்பு வீதம்

$$\frac{\text{1993 ஆம் ஆண்டு பிறப்புகள்}}{\text{1993 ஆம் நடு ஆண்டுச் சனத்தொகை}} \times 1000$$

இறப்பு வீதம் என்பது ஒரு குறிப்பிட்ட வருடத்தில் நடு ஆண்டு சனத் தொகையில் 1000 பேரில் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை

$$\text{இறப்பு வீதம்} = \frac{\text{குறிப்பிட்ட ஆண்டு மரண எண்ணிக்கை}}{\text{நடு ஆண்டுச் சனத் தொகை}} \times 1000$$

$$\text{1994ல் இறப்பு வீதம்} \quad \frac{\text{1994ல் இலங்கையின் மரண எண்ணிக்கை}}{\text{1994 நடு ஆண்டுச் சனத் தொகை}} \times 100$$

1992 ஆம் ஆண்டில் (பருமட்டான) பிறப்பு வீதம் 5.7

இயற்கை அதிகரிப்பு என்பது குறிப்பிட்ட காலத்தில் நிகழும் பிறப்பு இறப்பு எண்ணிக்கைகளின் வித்தியாசமாகும்.
இயற்கை அதிகரிப்பு = பிறப்பு எண்ணிக்கை இறப்பு எண்ணிக்கை
இயற்கை அதிகரிப்பு வீதம் என்பது சனத் தொகையில் அதிகரிப்பை அல்லது குறைவைக் காட்டும்.

$$\text{இயற்கை அதிகரிப்பு வீதம்} = \frac{\text{பிறப்பு வீதம் - இறப்பு வீதம்}}{10}$$

$$\text{அல்லது} = \frac{\text{குறிப்பிட்ட வருடத்தின் பிறப்பு எண்ணிக்கை- குறிப்பிட்ட வருட இறப்புக் எண்ணிக்கை}}{\text{நடு ஆண்டு மொத்த சனத் தொகை}} \times 100$$

எனவே ஒரு நாட்டின் சனத் தொகை மாற்றத்தின் மீது முக்கிய செல்வாக்குச் செலுத்துவது இயற்கை அதிகரிப்பாகும்.


ஒரு நாட்டின் சனத் தொகையில் அதிகரிப்பு அல்லது குறைவு ஏற்படும் வீதம் சனத்தொகை வளர்ச்சி வீதமாகும். பிறப்பு, இறப்பு, இடம் பெயர்வு ஆகிய மூன்று காரணிகள் செல்வாக்கு இதில் இடம் பெறும் எனினும் இயற்கை அதிகரிப்பைக் கணிப்பிடும் போது பிறப்பு இறப்பு ஆகிய இரு காரணிகள் மட்டுமே கவனத்துக்கு எடுக்கப்படும்.

$$\text{சனத்தொகை வளர்ச்சி வீதம்} \quad \frac{\text{மொத்த பிறப்பு வீதம் - மொத்த இறப்பு வீதம் - தூய இடம் பெயர்வு}}{\text{நடு ஆண்டு சனத்தொகை}} \times 100$$

ஒரு நாட்டின் அபிவிருத்தியைக் அளப்பதில் சனத்தொகை அதிகரிப்பு வீதமும் ஒருமுக்கிய காரணியாகும் (இயற்கை அதிகரிப்பு வீதம்பற்றி முடியுமான அளவில் அண்மைக்கால தகவல்களைக் பெற்றுக் கொள்ளவும்) உதாணரமாக 1994ம் ஆண்டின் அதிகரிப்பு வீதம் 1.4 ஆகும். (1993/1994 இலங்கைச் சனத்தொகை அட்டவணையிலிருந்து)

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் இயற்கை அதிகரிப்பு வீதம் கூடிய விதத்தில் காணப்படுகிறது. எனவே ஒரு நாட்டின் சனத் தொகையில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய காரணி இயற்கை அதிகரிப்பாகும்.

## (இயற்கை அதிகரிப்பு)
## இயற்கை அதிகரிப்பு வீதம்




இரு படத்திலும் குறிப்பிட்ட வருடங்களில் பிறப்பு, இறப்பு ஆகியன மட்டும் காட்டப்பட்டுள்ளன சனத் தொகையானது அதிகரித்தமையும், வீழ்ச்சியடைந்தமையும் வீதத்தில் காட்டுகின்றன. இவ்வீதங்களில் குடிபெயர்வு உட்படுத்தப்படுவதில்லை.

## இயற்கை வளர்ச்சி வீதம் (இலங்கை)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இலங்கை | = | 1.4 | ஊவா மாகாணம் | = | 1.8 |
| மேல் மாகாணம் | = | 1.2 | சப்பிரகமுவா மாகாணம் | = | 1.2 |
| மத்திய மாகாணம் | = | 1.7 | வடமத்திய மாகாணம் | = | 1.7 |
| தென் மாகாணம் | = | 1.4 | வடமேல் மாகாணம் | = | 1.3 |
| வடமாகாணம் | = | 1.6 | கிழக்கு மாகாணம் | = | 2.0 |

## தங்கியிருப்போர் வீதம்

இலங்கயின் பிறரில் தங்கியிருப்போர் 60% ஆகும். இதிலிருந்து தெளிவாவது உழைப்போர் நூறு பேரில் 60 பேர்தங்கியிருக்கின்றனர் என்பதாகும். அபிவிருத்தி அடைந்தவரும் நாடுகளில் தங்கியிருப்போர் வீதம் உயர் மட்டத்தில் காணப்படுகின்றது. அவர்களைக் பராபரிப்பதற்காக நாட்டின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியிருப்பதால் நாட்டின் கூடிய வளத்தைக் செலவழிக்க வேண்டியுள்ளது இதனால் நாட்டின் அபிவிருத்திக்கு தேவையான மூலதனத் தொகையில் பற்றாக்குறை நிலை எற்பட ஏதுவாகிறது.

கடந்த நூற்றாண்டில் இலங்கையின் சதன்தொகை 1871–1971 ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது 1871ல் 2.4 மில்லியனாக இந்த சனத்தொகை 1971 ஆம் ஆண்டில்

12.6 மில்லியனாக அதிகரித்தது. 1981 ஆம் ஆண்டில் 14.8 மில்லியனாகவும் 1994 ஆம் ஆண்டில் 17.8 மில்லியனாகவும் அதிகரித்தது.

## சனத்தொகை இருட்டிப்பு அடையும் காலம்

ஒரு நாட்டின் சனத்தொகை இருட்டிப்பு அடைய எடுக்கும் காலத்துக்கு அமைய வளர்ச்சி வேகத்தைக் கவனிக்க முடியும்.


வளர்ச்சி வீதம் ஒரு சத வீதம் எனின் சனத் தொகை இரட்டிப்பு அடைய 70 வருடங்கள் எடுக்கும்.

சனத் தொகை இரட்டிப்பு அடையும் காலம் $\frac{70}{\text{சனத் தொகை வளர்ச்சி வீதம்}}$

உ+ம்

இலங்கயின் சனத்தொகை 1994லிருந்து இரட்டிப்பு அடையும் காலம் இயற்கை வளர்ச்சி 1.5 வீதம் எனினும் $\frac{70}{1.5} = 46$ வருடங்கள்

## இலங்கையின் சனத் தொகை இரட்டிப்பு




மூலம் நீங்களும் உங்கள் நாடும் - அரச தகவல் திணைக்கள வெளியீடு

ஒரு நாட்டின் சனத்தொகை அதிகரிக்கும்போது அடிப்படைவசதிகளும் அதற்கேற்ப அதிகரிக்கப்படவேண்டும். உணவு இருப்பிடம், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து ஆகியவற்றை வழங்குவதும், சனத் தொகை வளர்ச்சி வேகத்துக்கு ஏற்ப இடம் பெறாவிட்டால் சமூகத்தில் பொருளாதார சிக்கல்கள் தோன்றும்.

65610 ச.கி.மீற்றர்கள் பரப்பைக் கொண்ட ஒரு சிறிய நாடான இலங்கையில் சனத்தொகை 18 மில்லியன் இருப்பதாக நம்பப்படுகிறது. அதன் அடிப்படையில் இருக்கும் வளங்களையும், சனத்தொகையையும் கவனத்தில் கொள்ளுதல் முக்கியமாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பொருளாதார வலு குறைந்தமட்டத்திலேயே காணப்படுகிறது. சுகாதாரம் கல்வி போன்ற நலன்புரி சேவைகளைக் வழங்குவது இலகுவான காரியமல்ல. இலங்கையில் இன்று ஒவ்வொரு ஆயிரம் பேரில் ஆறு பேர் தினமும் சிகிச்சை நாடி வைத்திய சாலைகளுக்கு செல்கின்றனர். பாடசாலைகளின் தேவைகளும் அதிகரித்தவண்ணம் இருக்கின்றன.

பாடசாலைகளில் மாணவ அதிகரிப்புப் போக்கை பின்வரும் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

| பாடசாலைகளில் மாணவர்தொகை அதிகரிக்கு வீதம் | | |
|---|---|---|
| ஆண்டு | பாடசாலை தொகை | மாணவர் தொகை |
| 1953 | 6581 | 1,569360 |
| 1972 | 8551 | 2,492754 |
| 1983 | 9576 | 3,458645 |

## 1.2 சனத்தொகை மாற்றத்தின் மீது செல்வாக்கு செலுத்தும் காரணிகள்

சனத்தொகை மாற்றத்தின்மீது பிறப்பு, இறப்பு, குடிபெயர் ஆகியன செல்வாக்கு செலுத்துகின்றன.

$$\text{கருவள வீதம்} = \frac{\text{குறிப்பிட்ட வருடத்தில் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை}}{\text{அவ்வருடத்துக்குள் 15-49 வயதுக்கு இடைப்பட்ட பெண்கள் தொகை}}$$

கருவளக் காலம் என்பது ஒரு பெண்ணுக்கு குழந்தை பெறுவதில் உடல்த் தகுதியுள்ள காலத்தைக் குறிக்கும். இலங்கையில் கருவளக்காலம் 15-49 வயது ஆகும். அதிகளவில் குழந்தைகளைப் பெறும் எல்லை 17-30 வயது எல்லையாகும்.

இலங்கையில் மிக அதிகமான பிள்ளைகளைப் பெறும் வயது எல்லையாக 25-29 வயது காணப்படுகிறது. இவ்வயது எல்லை நாட்டுக்கு நாடு வேறுபடலாம். கருவள உச்ச தகைமையுடன் காணப்படும் வயதுக்கு குழுவுக்குரிய பெண்களின் திருமணங்கள் அதிகரிக்கும் பிறப்பு வீதம் அதிகரிக்கின்றது. பிறப்பின் மீது பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

பெண்களின் திருமண வயது/ கருவள காலம்/ தேக நிலை/சமயம் கலாசாரம்/ வாழ்க்கைத்தரம்/ கல்வி நிலை/ தொழில் போன்றவை

மரண வீதம் என்பது மரணம் ஏற்படுவதற்கான நிகழ்தகவு மரணத்தின் மீது சில காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றது.

தற்கொலை/திடீர் விபத்து/ நோய் நிலை/கலவரங்கள்/ யுத்தங்கள்/ இயற்றை மரணம்

### குடிபெயர்வு

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு, ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்துக்கு வசிப்பிடத்தைக் மாற்றுவது குடிபெயர்வாகும். இது இரு வகைப்படுத்தலாம்.

1. சர்வதேச குடிபெயர்வு
2. உள்நாட்டுக் குடிபெயர்வு


பிறப்பினால் சனத்தொகை அதிகரிக்கிறது.
மரணத்தால் சனத்தொகை குறைகின்றது.
குடிபெயர்வால் சனத் தொகை அதிகரிக்கிறது அல்லது குறைகிறது

சனத் தொகையில் கல்வியில் நாம் சந்திக்கும் இன்னொரு எண்ணக்கரு

## குடித்தொகை விஞ்ஞான முறையில் மாற்றமுறும் காலம்

ஒரு நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தில் குறிப்பிட்ட காலத்தில் மாற்றமின்றி உயர் மட்டத்திலிருந்து பிறப்பு இறப்பு வீதம் பிற்காலத்தில் மாற்றமடையத் தொடங்கி மீண்டும் தாழ்ந்த மட்டத்தில் மாற்றமின்றி நிலவும் நிலைமை இப் பெயரால் அழைக்கப்படுகிறது. இதனை மூன்று அல்லது நான்கு கட்டங்களாக விளக்கலாம்.

### குடித்தொகை விஞ்ஞான முறையில் மாற்றமுறும் காலம்



சனத்தொகை மாற்றத்தின் மீது செல்வாக்கு செலுத்தும் மூன்று காரணிகள் பிறப்பு, இறப்பு, இடம் பெயர்வு ஆகியனவாகும். சனத்தொகை மாற்றத்தைக் அளவிடுவதற்கு உபயோகிக்கப்படும் ஒரு முறை சமநிலைச் சமன்பாடு ஆகும்.

**சமநிலை சமன்பாடு** $= P_2 = P_1 + (B-D) + (1-E) P_2$ – பிற் காலத்தில் நிலவும் சனத்தொகை

$P_1$ – முன்னர் நிலவிய சனத் தொகை

B,D,I,E – இவ் விடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த பிறப்பு இறப்பு உள் பெயர்வு வெளிப் பெயர்வு என்பன இவ் எழுத்துக்களால் படிமுறை ஒழுங்கில் காட்டப் பட்டுள்ளது.

## பிரதியீட்டு கருவள மட்டம்

ஒரு குறிப்பிட்ட பிறப்பு வளம் உள்ள பெண்கள் தமது எண்ணிக்கையை கூடிக் குறையாமல் தொடர்ந்து நிலைநாட்டுவதற்காக தேவையான பெண் மக்களின் எண்ணிக்கையை உருவாகுவது எந்த கருவயது மட்டமோ அந்த மட்டமே பிரதியீட்டு கருவளமட்டம் எனப்படும்.

தூய பிறப்பு வீதத்தின் பெறுமானம் 1 ஆக இருந்தால் பிரதியிட்டுத் கருவள மட்டத்தை அடையலாம்.

## குடிப்பரம்பல்

இலங்கையின் நில அளவுக்கு சார்பாக குடித்தொகை அதிகமாகும்.

உதாரணம்:

| | | |
|---|---|---|
| 1871 இல் | ச.கி.மி. குடித்தொகைப் பரம்பல் | 37 |
| 1971 இல் | " " " | 196 |
| 1992 இல் | " " " | 211 |
| 2000 இல் | " " " | 300 விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. |

உலகில் குடி அடர்த்தி கூடிய 10 நாடுகளில் இலங்கையும் ஒன்று. 9வது இடத்தைக் வகிக்கின்றது.

இலங்கையில் சமமற்ற குடிப்பரம்பல் நிலையும் உண்டு

உதாரணமாக மிகக் குறைந்த குடிப்பரம்பல் நிலை இலங்கையின் வட மேற்கு தென் கிழக்குப் பகுதியில் காணப்படுகின்றது.

மத்திய அளவான குடிப்பரம்பல் உள்ள பிரதேசங்களாக வரண்ட பிர தேசங்களிலும் மலையக சில நகரங்களில் காணப்படுகின்றது.

மிகக் கூடிய மட்டக் குடிப்பரம்பல் நிலையும் உண்டு. உதாரணம் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம்

## உலக சனத்தொகை நிலை

உலகின் சனத்தொகைப் பரம்பலும் சமமற்ற நிலையை காணப்படுகின்றது இன்று உலகின் 4 வலயங்களில் கூடிய குடி அடர்த்தி நிலை காணப்படுகின்றது.

வடகிழக்கு ஐக்கிய அமெரிக்கா
வடமேல் ஐரோப்பா
கிழக்காசியா,
தென்னாசியாவும் அண்மிய நாடுகள்

உலகில் 2/3 பகுதியில் சனத்தொகை அடர்த்தி மிகவும் குறைவானது

| | | |
|---|---|---|
| வெப்பப் பாலைவனம் | - | சகாரா, கலஹாரி போன்றவை |
| பெருங்காடுகள் | - | அமேசன், கொங்கோ |
| துருவப் பிரதேசம் | - | அண்டாடிக்கா கிரின்லாந்து |
| உயர் மலைசார் பீடபூமி | - | இமாலயம், ரொக்கி, அண்டீஸ், திபெத் பிடபூமி |

ஏனைய இடங்களில் சாதாரண குடிப்பரப்பில் நிலை உண்டு. அங்கும் மனித நடவடிக்கைகளின் தன்மைக்கேற்ப குடி அடர்த்தியில் வேறுபாடு காணப்படுகின்றது.

உலகில் வளர்ச்சியடைந்த நாடுகள் வளர்ச்சி வேகம் குறைவு

உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| சுவிடன் | 0.3 | அவுஸ்திரேலியா | 0.8 |
| பிரான்ஸ் | 0.4 | ஐக்கிய இராச்சியம் | 0.2 |
| ஜப்பான் | 0.3 | டென்மாக் | 0.1 |
| ஐ.அமெரிக்கா | 0.7 | சுவிட்சர்லந்து | 0.3 |

(1994 தரவுகள்)

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சனத்தொகை வளர்ச்சிவேகம் அதிகம் 1994 பொதுவாக 2%

| | | | |
|---|---|---|---|
| மாலைதீவு | 3.2 | ஈரான் | 3.6 |
| பங்களாதேஷ் | 2.4 | கம்போடியா | 2.9 |
| லாவோஸ் | 2.9 | பாகிஸ்தான் | 2.8 |
| மெக்ஸிக்கோ | 2.2 | நைஜீரியா | 3.1 |
| வியட்னாம் | 2.3 | நேபாளம் | 2.4 |

(1994 தரவுகள்)

உலக சனத்தொகை அதிகரிப்பில் வளர்ச்சியடைந்த நாடுகளின் குறைவான பங்களிப்பு அவர்களுக்கு ஒரு பிரச்சினையாக உள்ளது. இதனால் சில அபிவிருத்தியடைந்த நாடுகள் சனத்தொகையை அதிகரிக்க முயற்சிகள் எடுத்துகொண்டிருக்கின்றன. வளர்முக நாடுகளின் அதிக வளர்ச்சியும் பிரச்சினையாகும். அவை பிறப்பினைத்திட்டமிடுதல் போக்கில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

உலக சனத்தொகை (மில்லியன்களில்)

| சனத்தொகை | 1984 | 2010 | 2025 |
|---|---|---|---|
| அபிவிருத்தியடைந்த நாடுகள் | 1,164 | 1,228 | 1,259 |
| அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் | 4,443 | 5,794 | 7,119 |
| உலக சனத்தொகை | 5,607 | 7,022 | 8,378 |

சனத்தொகை அதிகரிப்பு ஒரு பிரச்சினையாக இருப்பது வளர்முக நாடுகளில் என்பதால் அவர்கள் இதன் மூலம் பின்வரும் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

உணவுப் பற்றாக்குறை, வேலை வாய்ப்பின்மை வீடின்மை சக்திமூலங்கள் பற்றாக்குறை, குடிப்பிரச்சினை, சூழல் மாசடைதல், வளங்கள் அழிதல் போன்றவையே அவை.

சனத்தொகை வளர்ச்சியை நாடு தாங்கிக் கொள்ளும் அளவுடன் மட்டுப் படுத்திக் கொள்வது நாட்டின் அபிவிருத்திக்கு உகந்ததாகும்.

நுகர்வுச் செலவு குறையும்
முதலீட்டுக்கான மூலதனம் சேமிப்பு
வள இழப்பு குறைதல்
சூழல் மாசடைதல் குறைதல்

விரக்திநிலை குறையும்
கற்றறிவின்மை பாதுகாப்பின்மை
என்பன நீங்குவதால் சாதகமான
பொருளாதார சமூக நிலைமையைத்
தோற்றுவிக்கலாம்.

இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வேகம் ஏனைய வளர்முக நாடுகளை விட மிகக் குறைந்த மட்டத்திலயே உள்ளது.

1994 இல் 1.5


இதற்கான காரணங்கள்

- கல்வி விருத்தி
- பெண்களின் தொழில் வாய்ப்பு அதிகரிப்பு
- பெண்களின் விவாக வயது அதிகரிப்பு
- பல்வேறு மனப்பங்குகளால் குழந்தைகள் பெறுதல் ஒத்திவைத்தல்
- வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு
- குடும்பத்திட்ட முறைகள் மீது கவனம் செலுத்தியமை

## நிலைத்திருக்கும் அபிவிருத்தி

சனத்தொகையையும் தொழில் நுட்பத்தையும் இணைந்து சுற்றாடலுக்கு விளைவிக்கும் தீமைகளை குறைத்துக் கொண்டு வளங்களை மனித நடவடிக்கைகளுக்காக உபயோகிக்கப்படுத்துவதே நிலைத்திருக்கும் அபிவிருத்தியாகும். எதிர் காலச் சந்ததியினரையும் கருத்திற் கொண்டு செயற்படுவது. இது இன்று அனேகமாக வளர்முகநாடுகள் நிலைத்திருக்கும் அபிவிருத்தி பற்றி அக்கறையும் ஆர்வமும் பெற்று வருகின்றன.

### உலக சனத்தொகையின் வரலாற்று ரீதியான வளர்ச்சி




(சனத்தொகைக் கைநூல் மூலம்)

(உலகின் கூடிய சனத்தொகையுடைய 12 நகரங்கள்)

| | | | |
|---|---|---|---|
| 1. | மெக்ஸிக்கோ | 7. | கல்கத்தா |
| 2. | டோக்கியோ | 8. | புவனஸ் அயர்ஸ் |
| 3. | சயோபவுலோ | 9. | பம்பாய் |
| 4. | நியூயோர்க் | 10. | சியோல் |
| 5. | ஷாங்காய் | 11. | பிஜிங் |
| 6. | லொஸ் ஏன்ஜல்ஸ் | 12. | ரியோடி ஜெனரோ |

## 1.3 சனத்தொகையும் வாழ்க்கை நலன்களும்

தனியாளினதும் மனித சமுகத்தினதும் வாழ்க்கை நிலைமைகளை உயர்மட்டத்தில் வைத்துப் பேணுதல் வாழ்க்கை நலன் எனப்படுகின்றது. சனத்தொகைக் கல்வியின் இறுதி இலக்கும் வாழ்க்கை நலனாகும்.

'வாழ்கை' நலன்' நாட்டுக்கு நாடு, பிரதேசத்துக்குப் பிரதேசம், கலாச்சாரத்துக்குக் கலாச்சாரம் மட்டுமன்றி காலத்துக்குக் காலமும் வேறுபடக்கூடிய ஒரு எண்ணக் கருவாகும்.

வாழ்க்கை நலன்கள் நோக்கி முன்னேறும் பாதையில் 5 துறைகள் பற்றி அறிஞர்கள் எப்போதும் கவனம் சென்ற வந்துள்ளார்கள்.

1. வாழ்க்கைத்தரம்
2. சனத்தொகையில் மரபு ரீதியான இயல்பு
3. சமூக கலாச்சாரக் காரணிகள்
4. அபிவிருத்தி நடவடிக்கைகள்
5. வளங்கள் என்பன

இந்த 5 காரணிகளின் பரஸ்பர செயற்பாட்டிலேயே வாழ்க்கை நலன் தங்கியுள்ளது என எதிர்பார்கப்படுகின்றது.

உடல், உள, சமூக கலாச்சார, சமய துறைகளினூடாக உயர்ந்த நிலைமையை அடைதல் வாழ்க்கை நலன் என்று வாதிடுவோரும் உளர்.

எந்த வரைவிலக்கணத்தின் மூலம் வாழ்க்கை நலனை விளக்க முற்பட்டாலும் அவை அனைத்தின் மூலமும் அடிப்படையில் கருதப்படுவது பௌதிக, உள ரீதியான உயர்ந்த மட்டத்தில் உள்ள மகிழ்ச்சியான சமூகத்தின் பயனுள்ள பிரஜைகளை உருவாக்குவதேயாகும்.

வாழ்க்கை நலன்களில் பங்கு கொண்டும் சில காரணிகளை அளக்க முடியுமாக இருப்பினும் சிலவற்றை அளக்க முடியாது.

வாழ்க்கை நலன்களில் உள்ளடங்கும் இருப்பிடம், உணவு, தொழில், வருமான மட்டம், சுகாதாரமும் ஊட்டமும், கல்வி வளப்பயன்பாடு சுற்றடலில் ஈடுபாடு என்வற்றை அளக்க முடியும்.

எனினும் பௌதிகத் தன்மையற்ற, மனிதப் பண்புகளை, கருணை, இரக்கம் எளிமை, பரஸ்பர உபகாரம், சமத்துவம், சுற்றாடலிற் பற்று, அழகியல் நுகர்ச்சி விழுமியங்கள் என்பவற்றை அளந்துகாட்ட முடியாது.

அபிவிருத்தியடைந்தது என்ற கூறப்படும் நாடுகளின் பௌதிக வளர்ச்சி உயர் மட்டத்தில் இருப்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். (ஐ.அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா, பிரான்ஸ் போன்றன) எனினும் அந்நாடுகளின் மக்களிடையே சில கீழைத்தேச நாட்டு மக்களிடம் காணப்படுவது போன்ற கருணை, அன்பு, எளிமை, பரஸ்பர உதவி, மனித நேயம், என்பன விருத்தியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்றும் கூட மேலைத்தேச சமூகத்தில் பௌதிக முன்னேற்றத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

## உணவு

மனித வாழ்க்கை நலனில் பாதிப்புச் செலுத்தும் முக்கிய காரணி உணவாகும். அது ஒரு அடிப்படைத் தேவையுமாகும். அளவு ரீதியாக மட்டுமன்றி பண்புரீதியாகவும் ஒரு வேளை உணவு மக்களுக்கு கிடைக்கச் செய்வதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் தனிமனிதன் உடல், உள விருத்தி ஏற்படுகின்றது. அளவு ரீதியாகவும் பண்புரீதியாகவும் சிறப்பாக அமையும் உணவு நாட்டின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஏதுவாகின்றது. கூடிய உற்பத்தி பொருளாதார அபிவிருத்திக்கும் பொருளாதார விருத்தி முழுச் சமூகத்தினதும் பண்புசார் விருத்திக்கும் அடிகோலுகின்றது.

## வசிப்பிடம்

நிரந்தரமான வசிப்பிடம் வாழ்க்கை நிலைப்பாட்டின் முக்கியமான ஒரு அம்சமாகும் பலரின் வசிப்பிடங்கள் நிரந்தரமற்றவைகளானதும் சுகாதார ரீதியில் தரமற்றவைகளாகவும் இருப்பதில் அது வாழ்க்கை நலனைப் பாதிப்பதாக அமைகின்றது. கொழும்பு நகரின் சேரிப்பகுதி வீடுகள் மூலம் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை எதிர்பார்க்க முடியுமா என்பது கேள்விக் குறியாகும். சுகாதாரமானதும், வசதியானதுமான ஒரு வீடு வாழ்க்கைக்கான பாதுகாப்பும் மனத்திருப்தியும் அளிக்கின்றது.

## சேவைகள்

சமூக நலனுக்கு அடிப்படையாக அமையும் சேவைகள் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. வளர்முகக் நாடுகள் பலவற்றில் பொருளாதாரப் பிரச்சினை காணரமாக நலன்புரி சேவைகளை வழங்குவது கஷ்டமாகியுள்ளது. தொழில் வாய்பற்ற இளைஞர்கள் தொகையினர், வயோதிபர், வலதுகுறைந்தோர் போன்றோருக்காக மேலை நாடுகளில் பல்வேறு நலன்பேண் சேவைகள் நடத்தப்படுகின்றன. இவ்வகையில் இலங்கை கீழைத்தேய நாடுகளுடன் ஒப்பிடும்போது முன்னனியில் நிற்பதாகக் கூறலாம். கல்வி, உணவுமானியம் சமுத்தி, ஜனசவிய, சுகாதாரசேவை போன்ற நலன் பேண் சேவைகள் இங்கு இடம்பெறுகின்றன.

## வேலைவாய்ப்பு

மக்களின் ஜீவனோபாயத்தைக் கொண்ட நடத்துவதற்கான வருவாய். இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. கைத்தொழில் விவசாயம், சேவைத்துறை ஆகிய பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்புகள் ஏற்பட்டு அதன் மூலம் வாழ்க்கையைக் கொண்டு நடத்தக்கூடிய சம்பளமும் கிடைக்கப்பெற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிற்பாதுகாப்பு, தொழில் சட்டதிட்டங்கள் என்பனவும் அமையப்பெற வேண்டும்.

## கல்வி

மனித வள அபிவிருத்தியின் ஒரு முக்கிய அம்சம் கல்வியாகும். சமூக மேம்பாட்டிற்கு கல்வியினால் கிடைக்கும் சேவை அளப்பரியது. உயர் கல்விக்கும் அபிவிருத்திக்குமிடையே பரஸ்பரத்தொடர்பு உண்டு. அத்துடன் கல்விக்கு உயர்ந்த நிலை வாழ்க்கை நலனை உயர்த்தும் ஒரு முக்கிய காரணமாகும்.

## சுகாதாரமும் ஊட்டமும்

தனிப்பட்டவர்களின் சுகாதாரம், முழுச் சமூகத்தின் சுகாதாரமும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. சுகாதார வசதிக்கும் போஷாக்குக்கும் இடையே நெருங்கிய தொடர்பிருப்பதும் குறிப்பிடத்தக்கது. கொள்ளை நோய்கள் பரவுதல், அவற்றிற்குப் பலியாவோர் தொகை, நோய் நிலைமை, சுகாதார சேவைகளின் தன்மை என்பன சுகாதார தரத்தை அளக்கும் நிபந்தனைகளாகக் கருதப்படுகின்றன. சிசு மரணவீதம், தாய்மார் மரணவீதம், ஆயுள் எதிர்பார்ப்பு போன்ற குறிகாட்டிகளும் சுகாதார தரத்தைக் காட்டும் சில பிரமாணங்களாகும்.


## சுற்றாடல் வளங்கள், அபிவிருத்தி

வாழ்க்கை நலன் பற்றிய பேசும்போது வளங்களுக்கும் அபிவிருத்திக்குமிடையே ஒரு சமநிலைத்தன்மை எதிர்பார்க்கப்படுவது முக்கியமானதாகும். அபிவிருத்தியின் போது வளங்களை அளவுக்கதிமாக நுகர்ந்து சுற்றாடலை மாசுபடுத்தும் போக்கு இன்று உலகெங்கும் காணப்படும் நிலையாகும். இதுபற்றிக் கவனம் செலுத்தும் நவீன விஞ்ஞானிகள் நிலைத்திருக்கும் ஒரு அபிவிருத்தி பற்றிக் க்வனம் செலுத்துகின்றனர். அபிவிருத்திக்கும் சுற்றாடலுக்குமிடையே உடன்பாடுடைய கரு அபிவிருத்திப் போக்கு பற்றிக் கவனம் செலுத்துவதில் முக்கியமாகும்.

## குற்றச் செயல்கள், இனவயதினர் குற்றச் செயல்கள், விழுமியங்கள்

ஒரு நாட்டின் அல்லது சமூகத்தில் காணப்படும் குற்றச் செயல்களுள் இளவயதினர் குற்றச் செய்பவர்களின் அளவு அந்நாட்டின் அல்லது சமூகத்தின் வாழ்க்கை நலன் பற்றிய ஒரு கருத்தை ஏற்படுத்த உதவும் ஒரு அம்சமாகும் பௌதிக முன்னேற்றங்கள் காணப்படினும், அங்கு குற்றவியல்கள் அதிகமெனின் அது விழுமியங்களின் வீழ்ச்சியையே காட்டுகின்றது. மேலை நாடுகளின் ஒப்பிட்டு ரீதியில் குற்றச் செயல்களும், இள வயதுக் குற்றச்செயல்களும் அதிகமாகும். இதற்கானகாரணம் சமூகத்தில் விழுமியங்கள் அடைந்துள்ள வீழ்ச்சியேயாகும்.

## 'வாழ்க்கை நலன்'களைக் கட்டியெழுப்புவதன் முக்கிய அம்சங்களின் பரஸ்பர செயற்பாடுகள்



## 1.4 குடும்பம்

### குடும்பம் எனும் எண்ணக்கரு

குடும்பம் என்பது சமூகத்தின் மிகச்சிறியதொரு செயற்படும் அலகாகும். ஒரு பொது வசிப்பிடப் பிரதேசத்தில் பல சமூக அங்கத்தவர்கள் கூடி வாழ்தல் குடும்பத்தின் பொது இயல்பாகும். பல்வேறு மட்டத்திலான அங்கத்தவர்கள் ஒரு குடும்பத்தில் இருப்பதைப் பொறுத்து குடும்பங்கள் வகைப்படுத்தல் படுகின்றன.

| | | |
|---|---|---|
| உதாரணம்: கருக்குடும்பம் | - | தாய், தந்தை, பிள்ளைகள் மட்டும் வாழும் குடும்பம் |
| அகன்ற குடும்பம்/ திறந்த குடும்பம் | - | தாய், தந்தை பிள்ளைகள் நெருங்கிய உறவினர் வாழும் குடும்பம் |

### ஒரு குடும்பத்தின் பணிகள்

ஒரு குடும்பத்தின் பணிகள் பல தரப்பட்டவை. பொருளாதார சமூக, சமய, பாலியல் என்ற பல்வேறு பணிகள் குடும்பத்தால் நிறை வேற்றப்பட வேண்டியுள்ளது. அதன் மூலம் அக்குடும்பத்துக்கும், முழுச்சமூகத்துக்கும் நன்மை கிடைக்கின்றது.

### பொருளாதார காரணிகள்

* குடும்பத்தின் விருத்திக்காக சிறந்த முகாமைத்துவத்தை ஏற்படுத்தல்
* ஒழுங்குபடுத்தப்பட விதத்தில் ஊழியத்தை வழங்க முடிதல்
* பணத்தை உரிய முறையில் பயன்படுத்தல் (முதலீடு, சேமிப்பு)

### சமூக நன்மைகள்

* காலாச்சாரப் பாரம்பயரிங்களும், பெறுமானங்களும் பாதுகாக்கப்படல்
* சமூக மயமாக்கல்
* மரபுகளைப்பேணி நடக்கப் பழகுதல்
* குடும்பத்தினதும், சுற்றாடலினதும் நலனைப்பேணல்

### கல்வி தொடர்பான நன்மைகள்

* முறைசார் கல்வி தொடங்க முன் ஆரம்ப ஆசிரியராக இருத்தல்
* திறன் விருத்திக்கு உதவுதல்
* மரபு ரீதியான அறிவு திரட்டப்படல்
* குடும்பத்திலும், சமூகத்திலும் தனக்குரிய பங்கை இணங்காணல்.
* சமூக நிகழ்வுகள் மூலம் கற்றல் வாய்ப்புகள் ஏற்படல்
* ஆளுமை விருத்தி
* முன்னுதாரணங்கள் பெறுதல்
* ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிக்க முடியுமாதல்.

### ஆன்மீக நன்மைகள்

* சமய நடவடிக்கைகளில் பயிற்சி
* ஆன்மீக விருத்தி
* அன்பும், கருணையும் உரிய முறையில் கிடைக்கப்பெறல்
* உரிய பாதுகாப்புக் கிடைத்தல்
* இரக்கம், பரிவு ஆகிய பண்புகள் வளர்க்கப்படல்.
* மூத்தோரை மாதிரியாக, கவனிக்க வாய்ப்பு ஏற்படல்
* பிள்ளைகளின் இயல்பாற்றல்களை திறமைகளை இணங்காணல் மூலம் உரிய வழியில் செலுத்த முடியுமாதல்.

### பாலியல், பிறப்பியல் நன்மைகள்

* இயற்கையான ஆசைகளை நெறிப்படுத்தல்
* பாலியல் தேவையை நிறைசெய்வதற்கான பலமான நிலையான ஏற்பாடு.
* பாலியல் நடவடிக்கைகளில் கட்டுப்பாடு
* சந்ததியைப் பராமரிக்க முடிதல்

மேற்கூறிய நன்மைகள் அமைத்து கொள்ள சில சமுக உறவுகள் இன்றியமை யாதவைகளாக உள்ளன. இத்தகைய சில உறவுகள் கிழே தரப்படுகின்றது.

* பரஸ்பரம் உதவுதல்
* மதித்தல்
* பரிமாறிக் கொள்ளல்
* அங்கீகரித்தல்
* பணிவு
* பாதுகாப்பு வழங்கல்
* முரண்பாடு தீர்க்க உதவுதல்
* விரக்தியைப் போக்க உதவுதல்

## குடும்ப உறுப்பினரிடையே இருக்க வேண்டிய இடைத்தொடர்பு

மேற்காட்டிய பணிகளை நிறைவேற்றுவது பற்றிய பொறுப்புகள் உறுப்பினர்களிடையே பங்கிடப்பட வேண்டும். மரபு ரீதியான குடும்பங்களில் இப் பொறுப்புகள் யாவும் ஒரு சிறப்பான உறுப்பினரிடம் குவிக்கப்பட்டுக் காணப்டினும் நவீன சமுகத்தேவைகள் இதிலிருந்து மாறுபட்டதாக உள்ளன. அவற்றிற்கேற்ப குறிப்பிட்ட ஒரு பொறுப்பு குறிப்பிட்ட ஒருவரிடத்திலே கூடுதலாக எதிர்பார்க்கப்பட்ட போதும் அதன் வெற்றி சகல உறுப்பினர்களின் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது. குடும்பத்தின் நலன் அதன் உறுப்பினர்களின் கூட்டுமொத்தமான ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது.

***உதாரணம்:*** உழைப்பு என்பது தந்தையின் பணியாகக் கருதப்படுகின்ற போதும் அது போதாத இடத்து தாயின் பங்களிப்புப் தேவைப்படுகின்றது.அதேபோன்று சமைத்தல் வீட்டைப்பராமரித்தல், என்பன தாயின் பொறுப்பாகக் கருதப்படினும் இதற்கான ஒத்துழைப்பு தந்தையிடமிருந்தும் ஏனைய உறுப்பினர்களிடமிருந்தும் கிடைக்கப் பெற வேண்டும்.

இதன்படி குடும்ப நடவடிக்கைகளின் போது ஆண், பெண் மரபு ரீதியான தலைமைத்துவம் போன்றவையன்றி காலத்தின் தேவையை கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

## நவீன குடும்பம் எதிர்நோக்கும் சவால்கள்

**நவீன குடும்பங்கள் எதிர்நோக்கும் சில சவால்கள் இதோ**

* கைத்தொழில் மயமாக்கலின் தாக்கம்
* நகர மயமாக்கலின் பாதிப்பு
* நவீன தொழில் நுட்பத்தாக்கம்
* தொடர்பு சாதனங்களின் தாக்கம்
* தாய்/தந்தை விலகி இருப்பது பற்றிய தாக்கம்
* போதைப் பொருள், எச்.ஐ.வீ./எய்ட்ஸ்

உகில் நிகழும் சமூக, பொருளாதார கலாச்சார மாற்றங்களின் செல்வாக்கு குடும்பத்திலும், தாக்கத்தைக் ஏற்படுத்துகின்றது. மேற்கூறிய தொடர்புகளைக் சீராக பேணுவதற்கு இத்தகைய மாற்றங்கள் தடையாகவும் அமைகின்றன.

இந்நிலைமைகளை எதிர்நோக்குவதற்காக குடும்பத்தில் பல்வகைத்திட்டமிடல் செய்யப்படுவது அவசியமாகும். அவை நிர்வாக மட்டத்திலும் எண்ணிக்கை ரீதியிலும் இடம்பெற வேண்டும்.

குடும்பத்தின் உறுப்பினர்கள் வெவ்வேறு காலப்பிரிவுகளில் வேவ்வேறு படித்தரங்களை அடைகின்றனர். உறுப்பினர்கள் அமையும் இத்தகைய படித்தரங்களுக்கு ஏற்ப குடும்பத்தில் நிகழும் கிடைத்தொடர்பு, தேவைகள், சவால்கள் என்பன வேறுபட்டதாக இருக்கும்.

இந்த சிறப்பியல்புகளை அறிந்து கொள்வதில் மூலம் உரிய படிமுறைக்கேற்றவாறு அமைத்துக் கொள்ளலாம். குடும்பவாழ்க்கையின் சிறப்புக்கட்டங்களாக பின் வருவனவற்றைக் கூறலாம்.

* புதிதாக திருமணமானவர்கள்
* சிறு குழந்தையை உடைய ஒரு குடும்பம்
* பாடசாலை செல்லும் வயதில் பிள்ளைகள் உள்ள குடும்பம்
* வயது வந்த பிள்ளைகள் உள்ள குடும்பம்
* பிள்ளைகள் பிரிந்து சென்ற பின் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள்

குடும்ப உறுப்பினர்களில் வயதெல்லைக்கு ஏற்ப பெற்றோர்களினதும் ஏனையவர்களதும் கடமைப்பாடுகள் வேறுபடுகின்றன. ஒவ்வொரு வயதெல்லைக் குட்பட்டவர்களின் உள உடல் பொருளாதார தேவைகளைக் நிறை வேற்றும் வகையில் குடும்பம் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு அமைப்பைக் கொண்டிருக்க வேண்டும்.

## 1.5 பொறுப்புள்ள பெற்றோர்கள்

### திருமணமும் திருமண வகைகளும்

ஒரு குழந்தையை உருவாக்க ஆண் பெண் இருவருடைய பாலியல் தொடர்பு அவசியம். அத்தோடு பிறக்கும் குழந்தைகளின் சிறப்பான வளர்ச்சிக்குத் தேவையான உடல், உள, சமூக, மன வெழுச்சி, பாதுகாப்பு என்பவற்றைக் வழங்குவதற்காகவும் இவ்விருவரது ஒத்துழைப்பும் அவசியம். இவை ஒரு வெற்றிகரமான குடும்பத்தில் ஒழுங்காக கிடைப்பது ஒரு முக்கிய விடயமாகும். இதற்கான ஒரு அடிப்படையாக திருமணம் அமைகிறது.

திருமண முறைகள் நாட்டுக்கு நாடு காலத்துக்கு காலம் வேறுபடுகிறது. இதற்கிணங்க ஒரு திருமணம் நடைபெறும் போது பின்பற்றப்படும் மரபுகள் இன, குல, சமய கோத்திர என்ற அடிப்படையில் வேறுபடுவதுடன் திருமணச் சட்ட முறைகளிலும் வேறுபாடு காணப்படலாம். பண்டைக்காலத்தில் சட்ட ரீதியான திருமணம்.பற்றி அவ்வளவு கவனம் செலுத்தப்படாவிட்டாலும் இன்றைய சமூகத்தில் திருமணம் என்பது சட்ட அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு நடைபெறும் ஒன்றைக்குறிக்கிறது.

### திருமணத்தின் நன்மைகள்

ஒரு சட்டப்படியான திருமணத்தின் மூலம் அதில் சம்பந்தப்படுபவர்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் பல நன்மைகள் உண்டு. அவை

* உளவியல் ரீதியிலான சமூக ரீதியிலான
* கலாசாசார ரீதியிலான
* சட்ட ரீதியிலான
* பொருளாதார ரீதியலான
* பாலியல்/ இனப்பெருக்க ரீதியாக என பலவாறாக அமையும்

| | |
|---|---|
| உளவியல் ரீதியான | * உள, உடல், ரீதியான பாதுகாப்பும், அன்பும் இரக்கம் கருணை என்பன உறுதிப்படுத்தப்படல் |
| சமூகரீதியான | * தமது இனபந்துக்களை அறிந்து கொள்ளல், இளம் தம்பதிகளுக்கான அங்கீகாரம், சீரான சமூக விருத்தி |
| கலாசார ரீதியான | * தான் அடையும் நிலையின் பாரதூரத்தை அறிதல், வாழ்த்துக்ளையும், வழிகாட்டல்களையும் பெறல், அங்கீகரிக்கப்பட்ட விழுமியங்களுக்கு உட்படல் |
| சட்ட ரீதியான | * சொத்துரிமை கிடைத்தல், சட்ட ரீதியான பாதுகாப்பு கிடைத்தல், பொறுப்பு வழங்கப்படல் |
| பொருளாதார ரீதியான | * பொருளாதார உதவிகள் |
| பாலியல்/ இனப்பெருக்க ரீதியான | * பாலியல் தேவைகளை நிறைவு செய்யும் வாய்ப்பு, குழந்தைகள் அதைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படைக் குழந்தைகள் வளர்க்கும் பொறுப்புக்கள் சாருதல் /எச்.ஐ.வி/எயிட்ஸ் போன்ற நோய்களிலிருந்து பாதுகாப்பு |

## இனப்பெருக்க செயலொழுங்கு

குழந்தைகள் வாழ்க்கையைத் தாயின் கருப்பையில் ஆரம்பிக்கிறது. குழந்தையின் பாதுகாப்பு, ஊட்டம், வளர்ச்சி என்ற தேவைகளை சரியாக நிறைவேற்றும் வகையில் மிகச் சிறப்பாக கருப்பை அமைந்துள்ளது.

உதாரணமாக

| | | |
|---|---|---|
| ஊட்டத்துக்காக | - | தொப்புள் கொடியால் இணைக்கப்பட்டுள்ளது. |
| பாதுகாப்பு | - | பாதுகாப்பு உறையினால் மூடப்பட்டுள்ளது. |
| வளர்ச்சி | - | கருவளர்ச்சி படிமுறையாக நிகழ்கிறது. வளர்ச்சி யடைந்து கருப்பையிலிருந்து வெளியேற்றப்படுவது சீராக நடைபெறுகிறது. இவை அனைத்தும் உள்ளக காரணிகளின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது. |

மனித வாழ்க்கை ஆரம்பமாவது ஒரு பெண்ணின் முட்டையும் ஆணின் விந்தும் இணைவதன் மூலமாகும்.

கருப்பை ஒரு பெண்ணின் இனப்பெருக்க தொகுதியின் ஒரு அங்கமாகும். இனப்பெருக்க தொகுதியின் ஏனைய உறுப்புக்கள் பின்வரும் பணிகளில் ஈடுபடுகின்றன.

| | | |
|---|---|---|
| சூல் | - | முட்டையை உற்பத்தி செய்தல் |
| சூல் குழாய் | | முட்டையை உரிய இடத்துக்கு கொண்டு சென்று விந்துடன் தொடர்பு படுத்தல். |
| கருப்பை | - | கருவைப் பாதுகாத்தல் தேவையான ஊட்டத்தை வழங்கல் |

கருப்பை மிகச் சிறப்பான முறையில் கருவைப்பாதுகாக்கும் அம்சங்களைக் கொண்டு இருப்பினும் சில வேளைகளில் கரு முதிர்ச்சி அடையும் காலம் (280 நாட்கள்) முடிய முன்னர் கரு வளர்ச்சி தடைப்பட இடமுண்டு. இயற்கைக் காரணங்களால் கூட இது நிகழலாம். இது கருச்சிதைவு எனப்படும். இயற்கைக் கருச்சிதைவு மட்டுமல்லாது செயற்கையாகவும் கருச்சிதைவு எய்தலும் உண்டு. அது சட்டவிரோதமானது இதன் மூலம் தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். வைத்திய ஆலோசனையின் பேரில் இவ்வாறு செய்யப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு.

## ஆண் இனப்பெருக்கத் தொகுதி

கருக்கட்டலுக்கு தேவையான விந்துக்கள் உற்பத்தி ஆணின் இனப்பெருக்கத் தொகுதியிலேயே இடம் பெறுகிறது. விந்துக்களை உற்பத்தி செய்வதற்கும் அதனை உயிர்ப்புடன் பெண் இனப்பெருக்கத் தொகுதி நோக்கி கொண்டு செல்லவும், உரிய பொருத்தமான அமைப்பில் ஆண் இனப்பெருக்கத் தொகுதி அமைந்துள்ளது.

பெண் இனப்பெருக்கத் தொகுதியின் முட்டையை நோக்கி பாதுகாப்புடன் செல்வதற்கு தேவையான ஆற்றல் விந்துக்கு உண்டு. இத்தகைய விந்துக்களை தினமும் மில்லியன் கணக்கில் உற்பத்தி செய்யும் ஆற்றல் ஆண் இனப்பெருக்க தொகுதிக்கு உண்டு.

உதாரணம் :

| | | |
|---|---|---|
| ஆண் விதை | - | விந்தை உற்பத்தி செய்தல் |
| | - | விந்தைச் சேகரித்து வைத்திருக்கும் இடம் |
| நெருங்கிய சுரப்பு | - | தேவையான சுரப்புக்களை சுரத்தல் |
| விந்துக்குழாய் | - | விந்தை உரிய இடத்துக்கு கொண்டு செல்லுதல் |
| | - | விந்தினை பெண் இனப்பெருக்க தொகுதியினுள் செலுத்தும். |

பெருந்தொகையான விந்துக்கள் உற்பத்தி செய்யப்படலும் (பெண்) முட்டை உற்பத்தி முற்றிலும் வேறுபட்டதாகும். 28 நாட்களுக்கு ஒரு தடவை ஒரு முட்டையை உற்பத்தி செய்யும். இது ஒரு பெண்ணின் 12/13 வயதிலிருந்து 50/55 வயது வரை நிகழும். இவ்வயது எல்லைகள் பல்வேறு காரணங்களால் வேறுபடவும் கூடும்.

இக்காலப்பிரிவுக்குள் 28 நாட்களுக்கு ஒரு தடவை செயல்படுவதால், கரு சுற்றுவட்டம் எனக்குறிக்கப்படுகிறது. இவ்வாறு உற்பத்தியாகும். முட்டை கருக்கட்டப்படாவிட்டால் கருப்பையின் சுவர்களின் சவ்வுகள் ஊடாக இரத்தத்துடன் யோனி வழியாக வெளியேறி விடும். இது 3 - 5 நாட்கள் வரை நிகழும்.

ஆண்களின் விந்து உற்பத்தி அவன், பருவமடைவதில் இருந்து வயோதிபம் வரை தொடர்ந்து நிகழும்

## சுயசுத்தம்

உடலின் ஏனைய தொகுதிகள் போன்றே இனப்பெருக்கத் தொகுதியுடன் இணைந்த உறுப்புக்களுக்கும் சுகாதார ரீதியான பாதுகாப்பு மிக முக்கியமானது. குளித்தல், சுத்தமாக இருத்தல், சுத்தமான பருத்தித் துணியை உள்ளாடையாக உபயோகித்தல், மாதவிடாய் காலங்களில் சுத்தமாக இருத்தல், இனப்பெருக்க உறுப்புக்களைச் சுத்தமாக வைத்திருத்தல் போன்ற விடயங்களில் கவனமாக இருத்தல் வேண்டும்.

## கருப்பமும், பெற்றோரின் இயல்புகளும்

பொதுவாக ஒரு பெண்ணின் உடல் அமைப்பு குழந்தைகளைப் பெறுவதற்குரிய இயல்பினை இயற்கையாகவே கொண்டுள்ளது. எனவே ஒரு பெண் ஆனவள் குழந்தை பெறுவது இயற்கையான நிகழ்வாகும். எனினும் அக்காலப் பிரிவுக்குள் தாய், பிறக்கவிருக்கும் குழந்தைக்காக சில சிறப்பான தேவைகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளது.

உதாரணம் :

தாயின் போசாக்கு
தேவையான ஓய்வு
தூக்கமும் தேகாப்பியாசமும்
சீரான உள நிலை
பொருத்தமான சுகாதார நடைமுறைகள்
உரிய வைத்திய ஆலோசனைகளைப் பெறல்
போதைப் பொருட்களிலிருந்து விலகியிருத்தல்

இத்தேவைகளை வழங்குவதுடன் சில ஆபத்தான நிலைமைகளும் இக்காலப் பகுதியில் நிகழ இடமுண்டு.

உதாரணமாக,

போஷாக்கின்மை
பிழையான இடத்தில் கருக்கட்டல்
கருச்சிதைவு

இத்தகைய சந்தர்ப்பங்களில் பொருத்தமான வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். இதற்காக முன் பிரசவ, பின் பிரசவ சிகிச்சை நிபுணர்களை நாடுவது சிறந்தது.

இச் சிகிச்சைகள் மூலம் பின்வரும் நிகழ்வுகள் நிகழ்கின்றன.

போஷாக்கின்மைக்கு நிவாரணம் வழங்கல்
சுகாதார போஷாக்கு நிலைமைகளை உறுதிப்படுத்தல்
இரத்தம், போஷாக்கு நிலைமைகளைக் உறுதிப்படுத்தல்
இரத்தம், சிறுநீர் பரிசோதனைகள் மூலம் தேவையான சிகிச்சை அளித்தல்
பொருத்தமான ஊசி மருந்துகளை வழங்கல்

கர்ப்பிணித்தாயின் சிறப்புத் தேவைகள நிறைவேற்ற முன்னுரிமை, கொடுத்தல் சிறந்த குடும்பத்துக்கான அடிப்படைத் தேவையாகும். எனவே குடும்ப உறுப்பினரின் கவனம் இவ் விடயங்களில் வேண்டப்படுகிறது.

ஒரு குழந்தையைத் திட்டமிடும் போது பெற்றோர்கள் பின்பற்ற வேண்டிய அம்சங்கள் கீழே தரப்படுகின்றன.

குழந்தைப் பேற்றின் போது ஏற்படக்கூடிய நோய்கள், அசௌகரியங்களிலிருந்து விடுபடல், உரிய சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றல் வேண்டும்.

ஒவ்வொரு பிரசவத்தின் போதும் பயிற்சி பெற்ற ஒருவரின் உதவி அவசியமாகும். முப்பத்தைந்து வயதுக்கு மேல் கருத்தரித்தலைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் பிரசவத்தின் போது ஏற்படும் அனர்த்தங்களை வெகுவாக குறைக்கலாம்.

## தாயினதும் குழந்தைகளினதும் தேவைகள்

ஒரு குழந்தையைப் பெற்றவுடன் அதன் வளர்ச்சிக்கு அத்தியவசியமாக தேவைப்படும் காரணிகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

உணவு
அன்பு
பாதுகாப்பு

இவை தாய்க்கு மட்டுமுரிய பொறுப்புக்கள் எனப் பொதுவாக கொள்ளப்பட்டாலும் தாய் தந்தை இருவரும் இதில் பங்கு கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

கர்ப்ப காலம், பாலூட்டும் காலம் என்பன பற்றிய பல மூடநம்பிக்கைகள் சமூகத்தில் உண்டு. குறிப்பாக, இக்காலகட்ட உண்ண வேண்டிய உணவு பற்றி பல்வேறு பிரதேசங்களில், பல்வேறுகலாசாரத்துக்கிடையே மூட நம்பிக்கைள் நிலவுகின்றன. அவற்றைப் பற்றித் தெளிவான விளக்கத்தைப் பெறுவதன் மூலம், தாய்க்கும், வயிற்றினுள் வளரும் சிசுவுக்கும் தேவையான போசாக்கு கிடைப்பதினை உறுதிப்படுத்த வேண்டும்.

## தாய்ப்பாலூட்டுதல்

குழந்தையின் உணவு பற்றிக் குறிப்பிடும் போது தாய்ப்பாலூட்டலுக்கே முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. குழந்தைக்கு மிகவும் பொருத்தமான உணவாக தாய்ப்பால் பற்றி பின்வரும் விடயங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பிரசவம் நடந்த உடனே குழந்தைக்கு பாலை உறுஞ்ச வசதி செய்து கொடுக்கப்படல் இதன் மூலம் குளோஸ் ரோம் கலந்த முதல் தாய்ப்பாலை உடனடியாக வழங்குதலும் முக்கியமானதாகும்.

- முதலாவது 3–4 மாதத்தில் தாய்ப்பால் மட்டும் ஊட்டுதல் அதன் பின்னர் மேலதிக உணவினை அறிமுகம் செய்தல் சூப்பியைக் கொடுத்தும் பழக்காது, கரண்டி, கோப்பை என்பவற்றைக் கிரமமாக பயன்படுத்தல் 18 மாதமாகும் வரை தாய்ப்பாலைக் கொடுத்தல்

- குழந்தையின் கேள்விக்கு ஏற்பவே தாய்ப்பாலை ஊட்ட வேண்டும் இதற்காக தாய், உள, உடல் ரீதியான தயார் நிலையில் இருக்க வேண்டும்.

- நான்கு மாதங்களின் பின் சிபாரிசு செய்யப்பட்ட மேலதிக உணவுகளை அறிமுகப் படுத்தலாகும்.

- பாலூட்டும் தாயின் உடல், உளத் தேவைகளை வழங்குதலில் குடும்ப உறுப்பினரின் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## முன்பள்ளிக் குழந்தைகளின் தேவைகள்

இப்பருவத்தில் குழந்தைகளின் போஷாக்கு சுகாதாரத் தேவைகள் பற்றி கவனம் செலுத்துவதுடன், குழந்தையின் தேவைகள், இயல்பு, ஆற்றல், விருத்தி, ஆக்கத்திறன் விருத்தி, போன்றவற்றுக்கு பொருத்தமாக சுற்றாடலை ஒழுங்கமைக்க வேண்டும். சமூக மயமாக்கலுக்கு தேவையான அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதும் பாடசாலை செல்ல பழக்குவதற்கான தேவையாகும். இக்காலத்தில் பாடசாலையில் நடைபெறும் கற்றல் செயலொழுங்குக்குக்குத் தேவையான அடிப்படைத் திறன் வளர்ச்சிக்குரிய ஆதரவை வழங்க வேண்டும்.

இதன் படி சிறிய தசை நார்களின் விருத்திக்கு உதவும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலும் முக்கியமானதாகும். எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் உதவும் அடிப்படைத் தகுதிகளை வழங்குவதேயன்றி குறிப்பிட்டவற்றை எழுத அல்லது வாசிக்க என்ற செயற்பாட்டையும் வழங்குவது முன்பள்ளிப் பருவத்தில் அவசியமில்லை. வீட்டில் நடைபெறும் நிகழ்வுகளில் குழந்தைகளை இணைத்துக் கொள்வதன் மூலமும் பெற்றோர்களின் வழிகாட்டலின் கீழ் சுதந்திர செயற்பாடுகளில் குழந்தைகளை ஈடுபடுத்துவதன் மூலமும் அனுபவங்களை வழங்குவதின் மூலமும் பெற்றோர்கள் இது தொடர்பான பல்வேறு பணிகளை ஆற்றலாம்.

## 1.6 கட்டிளமைப்பருவம்

பத்து வயது முதல் கட்டிளமைப்பருவ ஆரம்பத்துடன் பாலியல் முதிர்ச்சி காரணமாக ஆண், பெண் பிள்ளைகளில் வேறுபாடுகள் வெளிப்படத் தொடங்கி, உள, உடல் ரீதியான விரைவான மாற்றங்களும் நிகழ்கின்றன. கட்டிளமைப்பருவத்தை அடைதலும் அதனோடு இணைந்த வயதுக்குரிய மாற்றங்களும் தனியாள் வேறுபாட்டைக் கொண்டது.

### கட்டிளமைப் பருவத்தின் மாற்றங்கள்
### உடலின் மாற்றங்கள்

ஆண் பிள்ளையின் குரலில் மாற்றம் ஏற்படுதல், மீசை வளர்தல், தசை நார்கள் இறுகுதல், உடல் பலம், அதிகரித்தல் உடலின் குறிப்பிட்ட இடங்களில் ரோமம் வளர்தல் (மார்பு, கமக்கட்டு, இனப்பெருக்க உறுப்பினைச் சுற்றி) குரல் வளை வெளியில் தெரிதல், தோள் அகலமாகுதல், இனப்பெருக்க உறுப்புக்கள் விருத்தியடைதல்.

★ பெண் பிள்ளைகளின் மார்பு வளர்ச்சி, இடுப்பு வளர்ச்சி, உடலின் ஒரு நிறைவுத் தோற்றம், உடலின் சில குறிப்பிட்ட பகுதிகளில் (கமக்கட்டு, இனப்பெருக்க உறுப்பைச் சுற்றி) ரோமம் வளர்தல் வேகமான உடல் வளர்ச்சி, இனப்பெருக்க உறுப்புக்களின் வளர்ச்சி

### உடல் செயற்பாடுகளின் மாற்றம்

உடல் செயற்பாடுகளின் மாற்றம் உள்ளே நிகழும் மாற்றங்களுடன் தொடர்புபட்டு நிகழும்

**ஆண்**

உடலின் சில சுரப்பிகள் செயற்பாடு அதிகரித்து அதன் மூலம் விருத்தி ஏற்படுதல் விதையில் விந்து உற்பத்தியாதல் சில வேளைகளில் விந்து வெளியாதல்

**பெண்**

சுரப்பிகள் செயற்பாட்டால் இனப்பெருக்க உறுப்புக்கள் முதிர்ச்சியடைதல் பூப்பெய்தல் முட்டை உற்பத்தியாகுதல், பெண் பிள்ளைகளின் வளர்ச்சி ஆரம்பிக் கின்றது. (10-12 வயதுகளில் வளர்ச்சி வேகம் ஆண்களை விட மிக அதிகமாகும்)

கட்டிளமைப்பருவத்தின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் முதல் தடவையாக முட்டை உற்பத்தியாகி முதிர்வடைந்து சில நாட்களில் இரத்தமாக உடலிலிருந்து வெளியேறுகிறது. இது முதல் தடவையாக நடைபெறுதல் பூப்பெய்தல் எனப்படும். ஆண் பிள்ளைகளிலும் இத்தகைய முதல் விந்து வெளியாகுதல் நடைபெற்றாலும் கூட எமது கலாசாரத்தில் பெண் பிள்ளைகளின் இந்நிகழ்ச்சி சிறப்பாக கருதப்படுகிறது. பூப்பெய்தலின் பின் பொதுவாக இருபத்தெட்டு தினங்களுக்கு ஒருமுறை யோனி வழியாக இரத்தம் வெளியேறுதல் மாதவிடாய் எனப்படுகிறது. எனினும் பூப்பெய்தலின் பின் நடைபெறும் முதல் மாதவிடாய்க்குரிய காலம் தனியாள் வேறுபாட்டைக் கொண்டது.

13 வயதில் ஆண்களின் இனப்பெருக்க உறுப்பு வளர்ச்சியடைந்து விதையில் விந்து உற்பத்தியாகும்., இனப்பெருக்க உறுப்புக்கள் அளவில் பெரிதாகவும் வளரத் தொடங்கும் கட்டிளமைப்பருவ இறுதிக் கட்டம் வரை ஆண் பிள்ளையின் உயரம் பாலியல் வளர்ச்சி என்பன நிகழ்ந்து கொண்டே இருக்கும்.

## கட்டிளமைப்பருவ பருவத்தில் ஏற்படும் உளவியல் மாற்றங்கள்

### தனியாள் மட்டத்தில்

எதிர்ப்பாலினர் குறித்து ஆர்வம், தமது உணர்வுகளை வளர்ந்தோரிடம் மறைத்தல், · எதிர்பாலினங்களுடன் பழகுவதற்கு பகிரங்கமாக வெட்கப்படல். புதியவைகளைக் கண்டு பிடிப்பதில் ஆர்வம், தன்னை அழகாக வைத்துக் கொள்வதில் காலத்தைச் செலவிடல்

தனது தனித்துவத்தைப் பாதுகாத்தலில் விருப்பம் உடல் மாற்றம் பற்றிய ஆர்வம் சமூக விடயங்களில் நியாயத்தை எதிர் பார்த்தல் சமூகத்தில் சமூக நீதிகளை எதிர்பார்த்தல்.

### சமூக மட்டத்தில்

* தன்னை உயர்வுபடுத்தி காட்டல்
* தலைமைத்துவ விருப்பம்
* சுய கௌரவத்தைப் பாதுகாத்தல்
* வளர்ந்தோர் சமூகத்தில் பிரவேசிக்கும் பெரு விருப்பு

உதாரணம் :

வளர்ந்தோர் இயல்பைக் காட்டுவதற்காக சமவயதுக் குழுக்களின் செல்வாக்குக் குட்படுதல், மது அருந்தப்பழகுதல், சமவயதுக்குழு அங்கத்தவர்களிடம் தனிக் குழுவாக இணைதல்

### மனவெழுச்சி மட்டத்தில்

* பொறுமையின்மை
* ஆபத்துக்களை எதிர் நோக்குவதில் விருப்பம்
* உடனடித் தீர்மானங்களுக்கு வருதல்
* மறுக்காமல் எதனையும் செய்ய முற்படாமை
* திடீர் விபத்துக்களுக்கு உட்படும் போக்கு
* விரக்தி நிலை
* மன முறிவுக்கு எதிராக இருத்தல்
* பரீட்சித்துப் பார்த்தலில் ஆர்வம்
* சமூக நீதியை எதிர்பார்த்தல்.

## கட்டிளமைப்பருவத்தினரின் உள்ளார்ந்த திறன்கள்

கட்டிளமைப் பருவத்தினரிடையே பல உள்ளார்ந்த ஆற்றல்கள் காணப்படுகின்றன. அதனை முறையாக நெறிப்படுத்துவதின் மூலம் கட்டிளமைப்பருவத்தினருக்கு மட்டுமன்றி சமூகத்துக்கு நன்மை பயக்கச் செய்யலாம். இது தொடர்பாக வளர்ந்தோர்களுக்கு பாரிய பொறுப்புக்கள் காணப்படுகின்றன.

* ஆக்கத்திறன்
* துணிச்சல்
* அழகியல் உணர்வு
* பொது நலம்
* சமூக சேவை விருப்பம்

* தலைமைத்துவத்திலும் ஈடுபாட்டிலும் விருப்பம்
* யதார்த்த போக்கு
* தனித்துவமான போக்கு
* சுய கௌரவம்

## இளைஞர்களின் உள்ளார்ந்த திறன்களைச் சரியாக பயன்படுத்தல்

* தலைமைத்துவத்தை ஏற்கும் விருப்பத்தைச் சமூக சேவைக்காக பயன்படுத்தல்
* ஆக்கத் திறன்களுக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல், அவற்றை மதித்தல், வசதி செய்து கொடுத்தல்
* சம வயதினருடன் ஒன்றுபட்டுக் கருமமாற்றல்
* சேவைகளில் ஈடுபடுதல்
* தமது பிரதேச அபிவிருத்தித் திட்டங்களில் அக்கறை காட்டுதல் உ-ம் சிரமதானம், மரநடுகை இயக்கம்
* பாடசாலை, சமய தாபனங்கள் வேறு நிறுவனங்கள் என்பவற்றுடன்
* பரஸ்பர தொடர்பு கொள்வதின் மூலம் சமூக சேவையில் ஈடுபடுதல்
* அழகியல் ஆக்கங்களில் ஈடுபாடு (நடனம், பாடல், இசை)

## கட்டிளமைப்பருவத்தினரின் தேவைகள்

* பல்வேறு அலங்கார வகைகள் மூலம் எதிர்பாலரின் கவனத்தைக் கவருதல் இதற்காக புதிய உடை மோஸ்தர்கள், அழகு சாதனப் பொருட்கள் (சவர்க்காரம், பவுடர், உதட்டுச் சாயம்)
* அன்பைக் காட்டுதல் அன்பைப் பெறுதல்.
* பாலியல் தேவைகள்

## கட்டிளமைப்பருவத்தினரின் நடத்தைகள்

### தன்னினச் சேர்க்கை

பாலியல் விருத்தி ஏற்படும் காலத்தில் தன் இனச் சேர்க்கையில் நாட்டம் ஏற்பட வாய்ப்புண்டு. நாட்டம் நாளடைவில் எதிர்ப்பாலரை நோக்கித் திரும்புகின்றது. இத்தகைய செயற்பாடுகள் இயற்கைக்கு முரணானது என்பதோடு கொடிய ஏச்.ஐ.வி கிருமிகள் பரவுவதற்கும் காரணமாகலாம்.

### விந்துக்கள் வெளியேறுதல்

இது ஒரு இயல்பான செயற்பாடாகும். உடலுக்கு ஊறு விளைப்பதும் இல்லை. சுகாதாரக் கேடுகள் ஏற்பட மாட்டாது.

### சுய இன்பம்

முதிர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் தனது பாலியல் உறுப்பின் மூலம் சுய இன்பம் காணும் நிலை சில வேளைகளில் படிப்படியாக மாற்றம் அடைந்து எதிர்பாலாரை நாடும் நிலைமைக்கு உட்படுத்தலாம். சுயஇன்பம் ஒருபோதும் உடன் விந்து வெளியேற்றம், பாலியல் பலவீனம், உடல் நிறை குறைவடைதல் போன்றவற்றுக்கு காரணமாக அமைவதில்லை. இப்பழக்கம் விரும்பத்தக்கதல்ல.

### கட்டிளமைப்பரும் பற்றி சமூக மூடநம்பிக்கைகள்

* பூப்பெய்வதற்கு ஒரு குறிப்பிட்ட வயது உண்டு என்று நம்புதல்
* மாதவிடாய் காலத்தை நோய் உள்ள அல்லது அசுத்தமான காலமாக கருதுதல்
* மாதவிடாயின் போது குளிக்கக்கூடாது.
  (இது சுகாதாரத்துக்குக் கேடானது என்பதில் எவ்வித உண்மையுமில்லை)
* பூப்பெய்தலின் போது பின்பற்றப்படும் நடைமுறைகள்
  (விலக்கி வைத்தல், உணவுத் தடைகள்)
* விந்து வெளியாதல், சுய இன்பம் என்பவற்றால் உடல் நலக்கேடு ஏற்படும் என்ற நம்பிக்கை
* பாலியல் உறுப்புகளின் அளவுக்கும் பாலியல் செயற்பாட்டுக்குமிடையே தொடர்பு இருப்பதாக நம்புதல்
* விந்து வெளியாதல் உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கும் என்ற கருத்து (பாலியல் பலவீனம் போன்றவை)

### கட்டிளமைப்பருவத்தை எதிர் நோக்கும் சவால்கள்.

* திடீர் விபத்துக்கள் ஏற்படும் போக்கு (ஆர்வம் காரணமாக)
* பாலியற் செயற்பாடு காரணமாக நோய்கள் ஏற்படும் அபாயம்
* சுய இன்பத்தில் அடிமைப்படல்
* போதைப்பொருளுக்கு அடிமையாதல்
* மனமுறிவு
* சில ஆபாச நூல்களால், படங்களால் ஏற்படும் உளத் தடுமாற்றம்

### சவால்களை எதிர்கொள்ளும் விதம்

* வீணாகக் கழிக்கும் காலத்தை பயனுள்ளதாக கழித்தல் (உ-ம் விளையாட்டு)
* அழகியற் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுதல்
  நடனம், பாடல், ஆடல், ஓவியம், சுவரொட்டிகள் இசை போன்றவை
* சுற்றாடல் விருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடல்
* சமூக நலன் போன்ற அமைப்புகளில் பங்கு பெறல்
  (உ-ம் வைத்தியசாலை, முதியோர் இல்லம், மாணவர் சங்கங்கள்)
* அழகியல் நுகர்ச்சியை அதிகரித்துக் கொள்ளல் (பாடுதல், ஆடுதல், வரைதல்)
* போதைப் பொருட்களிலிருந்து விலகி இருத்தலுக்கான காரணத்தை வினவுதல்
* போதைப் பொருளிலிருந்து விலகி இருக்க சுய தீர்மானம் எடுத்தல்
* தனது தீர்மானத்தில் நிலையாக இருத்தல் மீண்டும் பழக்கத்துக்கு
* அடிமையாகாது இருக்கும் நுட்ப முறைகள்.
* அழகியல் நுகர்ச்சிக்கான மாற்று வழிகளை விருத்தி செய்தல்
* போதைப் பொருள், போதை வஸ்த்து எதிர்ப்பு விளம்பர நிகழ்ச்சிகளில் இடம் பெறும் விடயங்களைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளல்

### சமூகத்தில் அதிகமாக பரவியிருக்கும் பாலியல் நோய்கள் எச்.ஐ.வி/எயிட்ஸ்

* வெண்புள்ளி எனப்படும் கொனோரியா
* சிப்பிளிஸ்
* ஹெர்பிஸ்
* எச்.ஐ.வி/ ஏயிட்ஸ்

### பரவும் முறை

* இந்நோய் உள்ள ஒருவருடன் பாதுகாப்பற்ற முறையில் உடல் உறவு கொள்ளல்
* இந்நோயுடைய தாய்க்கு பிறக்கும் குழந்தை (சிப்ளிஸ், எச்.ஐ.வி)
* பிழையான முறைகளைக் கையாண்டு இரத்தமேற்றுதல்

### நிவர்த்தியாக்கும் வழிமுறைகளில் ஏற்படும் சிக்கல்

* பொருத்தமான பரிகார முறை
* சுகமடைந்ததை உறுதிப்படுத்திக் கொள்ளாமை
* சில நோய் அறிகுறிகள் தெரியாமை

### பரவுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்

* வறுமை, விபச்சாரத்தில் ஈடுபடுதல்
* தன் இனச் சேர்க்கையில் ஈடுபடுதல்
* குடும்ப முறிவு போதை வஸ்த்துக்கு உட்படுதல்
* பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் பாதுகாப்புக் கிடைக்காமை
* அறியாமை
* குடிப் பெயர்வு (உள்நாடு, வெளிநாடு)
* சனத்தொகையில் இளைஞர் வீதம் அதிகரித்தல், சமூகக் கண்ணோட்டம் இங்கு பாகுபடுத்தல் (விழுமியங்கள் பற்றிய சமூகக் கட்டுப்பாடு தளர்வுறுதல்)
* புதியவற்றைப் பரீட்சித்தல்
* யுத்த நிலமை
* தவறான நடத்தைகளை ஊக்குவிக்கும் வேறு சமூகக் காரணிகள்

### பாலியல் நோய்களின் விளைவுகள்

* உள அமுக்கம்
* நரம்பு நோய்கள்
* புற்று நோய்கள்
* மலட்டுத்தன்மை
* அங்கக் குறைபாடுடைய பிள்ளைகள் பிறத்தல்
* நிறை குறைந்த குழந்தைகள் பிறத்தல்
* நிரந்தர பாலியல் நோயாளியாக மாறுதல்
* சமூகத்தால் ஒதுக்கப்படல்
* பொருளாதாரப் பிரச்சினை
* தேசிய அபிவிருத்தியில் பங்கு கொள்ள முடியாமை
* வைத்திய சாலையில் சேர்க்கப்படல்

# 2.00 பாட உள்ளடக்கம்

## 2.1 பாட உள்ளடக்கம் (சமூகக் கல்வி)

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விப்பாடப்பிரிவுகள் | சமூகக் கல்விப் பாடப் பிரிவுகள் | எண்ணக்கரு விபரங்கள் | இன்றைய நிலை | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 06 | 1.00 சனத்தொகை பரம்பலியல் எண்ணக் கருக்கள்<br><br>1.01 சனத் தொகை எண்ணக்கரு<br>1.02 அளவு, பிரிவுகள் அமைப்பு | ஆண்டு 6 தலைப்பு எமது சூழலும் அதில் வசிப்போரும்<br><br>6.1 எமது பாடசாலை<br>6.10 பாடசாலைச் சமூகம்<br>6.15 பாடசாலை சமூக அமைப்பு | 1.00 **சனத்தொகை எண்ணக்கரு**<br>குறிப்பிட்ட ஓர் இடத்தில் வசிக்கும் குடிகளின் எண்ணிக்கை இவ்விதம் கிராமம் நகரம், பிரதேசம், நாடு<br>1.02 **அளவு**<br>ஓர் குறிப்பிட்ட வருடத்தில் குறிப்பிட்ட பாடசாலையின் எண்ணிக்கை இது பாடசாலை சனத்தொகை அளவாகும். ஒரு பிரதேசத்தின் நாட்டின் சனத்தொகையும் இவ்வாறு அளவிடப்படலாம்.<br>அமைப்பு<br>பாடசாலை மாணவர்களை ஆண் பெண் வயது அடிப்படையில் வேறுபடுத்தலாம். பிரிவுகள் பாடசாலையிலுள்ள பல இன (சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் அல்லது பௌத்தம், இந்து இஸ்லாம் என்ற வகையில் காட்டலாம்.) | உண்டு | 6.1.31 – 6 ஆம் ஆண்டில் பாடசாலை இணைப்பின் கீழ் இவ்வெண்ணக்கரு அறிமுகப்படுத்தல் வேண்டும். |
| | 3.00 சனத்தொகையும் வாழ்க்கை நலன்கள் பற்றிய பிரச்சினைகள்<br><br>3.01 வாழ்க்கை நலன் எண்ணக்கரு | 6.21 கிராமம்/ நகரம்<br>6.21 கிராமத்தின் நகரத்தின் பௌதிக சூழல்கள்<br><br>6.2.14 பிரதேச வள அபிவிருத்தி | 3.01 சனத்தொகை எண்ணக்கரு அறியப்பட்டுள்ளது. வாழ்க்கை நலன் எண்ணக்கரு அறியப்படவில்லை. ஒருவர் தனிப்பட்ட வகையிலும் சமூக ரீதியாக உயர் வாழ்க்கைத் தரத்தைக் கொண்டிருப்பதைக் குறிக்கும். இதற்காக முதன் முதலில் பௌதிக | இல்லை | வாழ்க்கை நலன் பற்றிய எண்ணக்கரு புதியதாகும். கிராமம்/ நகர வளங்கள் ஊடாக இவ்வெண்ணக்கருவில் பிரவேசிக்கலாம். பிரவேசம் எதிர் பார்க் |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விப்பாடப்பிரிவுகள் | சமூகக் கல்விப் பாடப் பிரிவுகள் | எண்ணக்கரு விபரங்கள் | இன்றைய நிலை | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | வசதிகளை வழங்க வேண்டும். உயர் வாழ்க்கைத்தரம் இதன் மூலம் எதிர் பார்க்கப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு இடைநிலை, உயர் கல்வியை நிறைவேற்றி வாழ்க்கையின் தரத்தை அடைய முடியும். | | கப்படுகின்றது தேவைகளின் எதிர் காலத்தில் விருத்தி செய்ய முடியும் ஒரு எளிய அறிமுகம் மட்டும் |
| | 3.09 செல்வம் | | 3.09 கிராமத்தின் நகரத்தின் வளம், நீர், காற்று, நிலம், வளி, உயிரினங்கள் என்பனசிக்கனமாக உபயோகிப்பதன் மூலம் வாழ்க்கை நலன்களை அடைதல் முடியும். | | |
| | 3.10 அபிவிருத்தி | | 3.09 கிராமத்தின்/ நகரத்தின் வளத்தை அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் அபிவிருத்தி செய்வதன் மூலம் வாழ்க்கை நிலையை அடைய முடியும். | | |
| 6 | 1.02 சனத் தொகை இணைப்பு | 6.4 தேசிய கீதம், தேசியக் கொடி, அரச இலட்சினை<br>6.41 இணைப்பு | நாட்டின் சனத்தொகை இணைப்பை பாடசாலை சனத்தொகை இணைப்பின் மூலம் முன் கொண்டு வரலாம். இலங்கையின் குடித்தொகையில் பல இன, மொழி, மதப்பிரிவுகள் உள்ளமை, இதை விட நகர/ கிராம தொழில் ரீதியாக பிரிக்க முடியும் பல்வேறு முறைகளில் கீழ் இருக்கும் | | 6.4.1 என்பதன் கீழ் எளிய அறிமுகம் மட்டும் எதிர்பார்க்கப்படுகின்றது வரைபில் காட்ட முடியும். |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விப்பாடப்பிரிவுகள் | சமூகக் கல்விப் பாடப் பிரிவுகள் | எண்ணக்கரு விபரங்கள் | இன்றைய நிலை | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | வேற்றுமையில் ஒற்றுமை காண்பது சிறந்தது. அதாவது திருப்தியான குடித்தொகையை வைத்திருக்க வேண்டியது சிறு வயதிலேயே உணர்த்தல். | | |
| 6 | 4.00 குடும்பம் | 4.043 குடும்பத்தின் தொடர்பு | 4.03 குடும்பத்தை அறிமுகம் செய்யும் ஒரு எண்ணக்கரு, கிராமம்/ நகரம் பற்றிக் குறிப்பிடும் போது கிராமமத்தின்/ நகரத்தின் மிகச் சிறிய அலகு குடும்பம் என்பதைத் தெரிவித்து ஒரு சிறந்த குடும்பம் ஒரு சிறந்த கிராமத்தை/ நகரத்தை ஏற்படுத்த உதவும் என இதற்காக குடும்ப வகைகள், குடும்பத்தின் இடைத்தொடர்பு விருத்தி செய்யப்பட்ட வேண்டிய விதம் குறிப்பிடல் முக்கியமாகும்.<br>உ-ம்: பரஸ்பரம் பொறுமை, உதவி களைப்பிரித்தறிதல் முக்கியமாகும். முதியோரைக் கவனித்தல் பெற்றோர் வயோதிபர்களுக்கு உதவி செய்தல் என்பன விரி குடும்பத்தின் பயிற்சி எனக் காட்டலாம். பெரும் பாலும் இவற்றில் இத்தகைய கூட்டுக் குடும்பங்களும் நர கருக் குடும்பங் களும் உண்டு எனக் காட்டப் பட்டுள்ளது. | இல்லை | இவ்வலகு ஆண்டு 6 வரலாறு சமூகக் கல்விப் பாடத்திட்டத்தில் புதிதாக அறிமுகப்படுத்த உத்தே சிக்கப்பட்டுள்ளது. கிரா மம்/ நகரம் பாடத்தில் கிராமம்/ நகரம் கட்டி யெழுப்பப்படுவது சில குடும்பங்கள் மூலம் நடைபெறுவதைக் கூறி பாடத்திட்டத்தில் பிரவே சிக்கலாம்.<br>குடும்பத்தில் கடமைகள் பொறுப்புக்களை ஒரு அட்டவணை மூலம் காட்டி பாடத்தை விருத்தி செய்தல் எளிய விளக்கமே எதிர் பார்க்கப்படும். |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விப்பாடப்பிரிவுகள் | சமூகக் கல்விப் பாடப் பிரிவுகள் | எண்ணக்கரு விபரங்கள் | இன்றைய நிலை | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 7 | 3.00 சனத்தொகை வாழ்க்கை நலன் பற்றிய பிரச்சினை | தலைப்பு: எமது தாய் நாடு | ஆண்டு 6 இல் படித்த விடயங்களை மேலும் விருத்தி செய்தல் | | தான் பெற்ற அறிவு மூலம் குடும்பத்தின் தொடர்பைக் கட்டியெழுப்பலாம். கிராமத்தின் வளம், நாட்டின் வளம் வாழ்க்கை நிலையை அடைய ஏதுவாகும் விதத்தினை வரைபு மூலம் காட்டலாம். |
| | 3.10 அபிவிருத்தி | 7.4 இயற்கை வளங்களும் முக்கிய உற்பத்திகளும்<br>7.4.1 இயற்கை வளங்கள் | 7.4.1 இவ்வலகின் கீழ் இவ்வலகை விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு கிராமம்/ நகரம்/ என்பனவற்றின் வளங்களைப் பயன்படுத்தும் விதத்தை மையமாகக் கொண்டு நாட்டின் வளங்கள் (நீர், நிலம், கனியங்கள், தாவரங்கள், விலங்குகள்) வாழ்க்கை நலனை அடைந்து கொள்வதற்காக எவ்வாறு பயிற்சிபடுத்தல் என்பது விளக்கப்படல் வேண்டுமென எதிர் பார்க்கப்படுகின்றது. அடிப்படை வளங்கள் பொதுவாகச் சமமாகப் பிரிந்து செல்லும் வகையில் பாதுகாப்புடன் பயன்படுத்தி அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நிலையை அடைய முடியும் என்பது விளக்கப்படல் வேண்டும். | | |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விப்பாடப்பிரிவுகள் | சமூகக் கல்விப் பாடப் பிரிவுகள் | எண்ணக்கரு விபரங்கள் | இன்றைய நிலை | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 8 | 3.00 சனத் தொகை வாழ்க்கை நலன் பற்றிய எண்ணக் கருக்கள்.<br>3.01<br>3.02 | தலைப்பு: நாம் வாழும் உலகு<br>8.5 மனிதனின் அடிப் படைத் தேவைகள்<br>8.5.1 உணவு உடை, வீடு | 6.7 ஆண்டுகளில் படித்த வாழ்க்கை நலன் பற்றிய எண்ணக்கருவை மேலும் விரிவாகப் படித்தல், குறிப்புகள்/ வரைபுகளில் மூலம் உலகைத் தொனிப் பொருளாக வைத்து செய்யப்படும் கற்பித்தல் என்பதால் உலகின் நாலா பக்கங்களும் இவ்வடிப்படைத் தேவைகள் பிரிந்து செல்லும் விதம் பற்றிக் கற்பதன் மூலம் வாழ்க்கை நலனை அடைவதற்கு ஒற்றுமை ஒத்துழைப்பு இணைத்து வாழல் உடன் வாழ்வது எப்படி பரீட்சித்தப் பார்க்க எதிர் பார்க்கப்பட்டுகின்றது. இங்கு அடிப்படைப் பௌதீகத் தேவைகளான உணவு, உடை, உறையுள் வசதி குறைந்த நாடுகளான எதியோப்பியா சூடான் என்பன வற்றை உதாரணமாகக் காட்டி ஆரம்பிக்கலாம். இதன் மூலம் உலகின் வாழ்க்கை நலனை அடைய ஒவ்வொருவரும்/நாளும் ஒத்துழைக்க வேண்டிய விதத்தை காணலாம். | ஆம் | உ-ம் ஆண் பெண் தேவைகள் தனிப்பட்ட தேவைகள் எளிய தேவைகள் முதல் சிக்கலான தேவை களாவன. |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விப்பாடப்பிரிவுகள் | சமூகக் கல்விப் பாடப் பிரிவுகள் | எண்ணக்கரு விபரங்கள் | இன்றைய நிலை | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 9 | 3.00 சனத்தொகை குடும்ப வாழ்க்கை பற்றிய எண்ணக் கரு<br>3.09 வளங்கள் | இலங்கையும், இலங்கையரும்<br>9.3 கனிய வளங்கள்<br>9.32. பாதுகாப்பு | கனிய வளங்களை மனித தேவைக்காக பயன்படுத்தும் போது நிலைத்திருக்கும் அபிவிருத்தி பற்றிச் சிந்தித்து எதிர்காலச் சந்ததியினருக்கும் பயன்படுத்தக் கூடிய வகையில் உபயோகிக்க வேண்டும். அனேகமானவை முடிந்து போகும் வளங்கள் என்பதால் வாழ்க்கை நலனை அடைந்து கொள்வதற்காக அதற்குத் தேவையான வளங்களினூடாகவே அடைந்து கொள்ள வேண்டும். | உண்டு | வளப் பாதுகாப்பு நிலைத்திருக்கும் அபிவிருத்தி என்பவற்றைத் தொனிப்பொருளாகக் கொண்டு பண்பாக் கத்தை ஏற்படுத்த முயற்சித்தல் |
| 10 | 3.10 அபிவிருத்தி நிலைத்திருத்தல் | 9.4 கைத்தொழில் அறிமுகம் | மேற்கூறிய விபரங்களை நிலைத்திருக்கும் அபிவிருத்தியை நோக்கி ஈடுபடுத்தல் மூலம் மேலும் விளக்கலாம். | | |
| | 3.11 குற்றங்களும் இள வயதுக் குற்றச் செயல்களும் | 9.4.2 வேறு வருமான வழிகள் உல்லாசப் பயணத்துறை | உல்லாசப் பயணத்துறையில் பக்க விளைவுகள் பற்றிக் கூறும்போது இளய வயதினர் குற்றச்செயல்பாடுகள், வேறு காரணங்களாலும் இவை ஏற்படுவதைப் பற்றி விளக்குதல். | 3.11<br>இல்லை | உல்லாசப் பிரயாணத் தொழில் மூலம் ஏற்படக் கூடிய இள வயதினர் குற்றங்களை எடுத்துக் கூறி பிரவேசிக்கலாம். |
| | 9.4.3 கைத்தொழில் தொடர்பான பிரச்சினைகள் | 4.00 குடும்பம், குடும்பம் எதிர்நோக்கும் சவால்கள் | புதிய கைத்தொழில் மயமாக்கல் மூலம் குடும்பம் எதிர் நோக்கும் சவால்களை விபரித்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. தாய் வீட்டிலிருந்து வெளியே செல்லல், தந்தை தூரமாதல், பரஸ்பரத் தொடர்பு முறிவடைதல், சனத்தொகைப் பெருக்கம் வாழ்க்கை நலன் கூடிய சனத்தொகையின் குறைவாக இருப்பதும் சனத்தொகை | 4.00<br>உண்டு | வேலை தேடி மத்திய கிழக்கு செல்லும் பெண்கள் பற்றிக் கூறிப் பாடத்தில் பிரவேசிக்க முடியும். |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விப்பாடப்பிரிவுகள் | சமூகக் கல்விப் பாடப் பிரிவுகள் | எண்ணக்கரு விபரங்கள் | இன்றைய நிலை | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 9 | 6. இலங்கையில் பிரச்சினைகள்,<br>6.1 பொருளாதார<br>6.2 உணவு உறையுள்<br>6.3 தொழில் | 9.6.1 இலங்கையின் பிரச்சினைகள்<br>9.6.2 பிரச்சினைகளும் தீர்வுகளும் | தொடர்பாக இலங்கை எதிர் நோக்கும் பிரச்சினைகள் இதற்கு உணவு/ உடை/ உறையுள் சுற்றாடல் வள அபிவிருத்தி, குற்றங்கள் இளவயதினர் குற்றங்கள் போன்றவை செல்வாக்குச் செலுத்தி யுள்ளன. | | வாழ்க்கை நலனை அடையும் போது மேற்கூறிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டியது எதிர் பார்க்கப்படுவதாகும். |
| 10 | 3.00 சனத்தொகை வாழ்க்கை நலன் பற்றிய பிரச்சினை | 10.2 தொழில் நுட்பம் உற்பத்திப்பங்கீடு | 3.00 சனத்தொகை, வாழ்க்கை நலன் பற்றிய பிரச்சினையில் குறிப்பிட்ட பிரசுரங்கள் வாயிலாக வாழ்க்கை நலனை அடைவதற்காக சேவைகள், தொழில், ஏனைய தேவைகள் இவை காணப்படல், சுற்றாடற்பாதுகாப்பில் கவனம் செலுத்தல், இதற்கென வாழ்க்கை நலனை அடையும் விதத்தைக் காட்டும் படம், வரைபு, உரு மூலம் விளக்கலாம். சூழல் மாசடைதல் மனிதனாலேயே மேற்கொள்ளப்படும் பிரச்சினை என்பதால் அதற்கான அவனின் பொறுப்பு, தியாகம் என்பன விளக்கப்படல் வேண்டும்.<br>சனத்தொகை<br>↕<br>வளங்கள் ↔ வாழ்க்கை நலன் ↔ வாழ்க்கைத் தரம்<br>அபிவிருத்திச் செயலாளருக்கு ↔ சமூக கலாச்சாரத் தொகுதி | உண்டு | மனிதர்கள் அதிகரிக்கும் போது தேவைகள் அதிகரிப்பதும் அவற்றை நிறைவேற்ற முனையும் போது வளி, நீர், நிலம் என்பன படிப்படியாக மாசடைவதால் முழுச் சுற்றாடலுமே மாசடைதல் பற்றிய உருவைக் காட்டி விளக்குதல் |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விப்பாடப்பிரிவுகள் | சமூகக் கல்விப் பாடப் பிரிவுகள் | எண்ணக்கரு விபரங்கள் | இன்றைய நிலை | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 10 | 3.09 வளங்கள் | 10.22 தொழில் நுட்பவியல் | வளங்களும் தொழில் நுட்பங்களும் இணையும் போது உற்பத்தி அதிகரித்தமையும், சனத்தொகை வளர்ச்சியுடன் பண்டங்களுக்கான கேள்வி அதிகரிப்பை தொழில் நுட்பத்தின் உதவியுடன் நிவர்த்தியாக்க முடியும். எனவிளக்கவும் தொழில் நுட்ப முன்னேற்றம் தோற்றுவித்த அதிகரிப்பு மானிட விருத்தியின் பல கண்டு பிடிப்புக்களில் (வெப்பமாக்கி இயந்திரம், வானொலி, தொலைபேசி, மோட்டோர் வாகனம்) ஈடுபட ஏதுவாயிற்று தொழில் நுட்ப உபகரணங்களைக் குறைந்த அளவிலேயே என்பதைக் விளக்கலாம். | உண்டு | மனித வாழ்வை இலகுபடுத்தி புதிய கண்டுபிடிப்புக்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க ஆலோசனை கூறுவதன் மூலம் மேலும் விளக்கலாம். |
| 10 | 2.00 சனத் தொகை மாற்றம் | 10.3 மனித நடவடிக்கைகளும் உலகின் பல்வேறு பிரதேசங்களும் தென் ஆசியா இலங்கை | சனத்தொகையில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சியை தென் ஆசிய நாடுகளிலிருந்து காட்டலாம். தென்ஆசியா சனத்தொகை தரவுகள், வரைவுகள் மூலம் சனத்தொகை வளர்ச்சியைக் காட்டலாம். தென் ஆசியாவின் மிகை சனத்தொகை வளர்ச்சியால் ஏற்பட்ட பிரச்சினைகளை விளக்கலாம். பெண்களின் கருவள வயதெல்லை 15 45 பெண்களின் அதிகரிப்பு நாடுகளுக்கிடையிலான குடிபெயர்வு என்பன சனத்தொகை மாற்றத்துக்கு காரணமாகும். | இல்லை | தென் ஆசிய நாடுகளின் சனத்தொகைத் தரவுகளைச் சேகரித்தல் கருவள வயதெல்லையிலுள்ள பெண்களின் சனத்தொகை அளவைக் காட்டுதல் பிறப்பு இறப்பு பெயர்வு ஆகியன பற்றிய அளவுகள் மூலம் வரைவிலக்கணப்படுத்தல். |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விப்பாடப்பிரிவுகள் | சமூகக் கல்விப் பாடப் பிரிவுகள் | எண்ணக்கரு விபரங்கள் | இன்றைய நிலை | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 10 | 1.08 தங்கியிருப்போர் வீதம்<br>1.09 சனத்தொகை இரட்டிப்புக் காலம்<br>1.10 வயோதிபமடைதல்<br>2.0 சனத்தொகை மாற்றம்<br>2.11 பிறப்பு<br>2.12 இறப்பு | சனத்தொகைப்பிரச்சினை | சனத்தொகை இரட்டிப்படைதற் காலம் முன்னையை விட தற்போது விரைவடைந்துள்ளது. வேகமாக சனத்தொகை வளர்ச்சியினால் ஏற்படும் பிரச்சினைகளைக் குறிப்பிடவும். தங்கியிருப்போர் வீதம் (15க்க குறைந்த 65 வயதுக்குக் கூடிய) சனத்தொகை வளர்ச்சியுடன் அதிகரித்துள்ளது. வயோதிபர் தொகை அதிகரிப்பதும் ஒரு பிரச்சினையாகும். இலங்கையில் இன்றைய 60 வயதுக்குக் கூடியோர் ஆறு வீதமாகும். 2000 ஆண்டில் 11 வீதமமாக அதிகரிக்கும் இவர்களைப் பராமரித்தல் ஒரு பிரச்சினையாகும். சனத்தொகையோடு இணைந்த பிரச்சினைகளாக உணவு, சுகாதாரம், சுற்றாடல் போன்ற ஏதாவது ஒரு தலைப்பின் துணைகொண்டு விளக்கலாம்: வாழ்க்கை நலன்கள் பற்றிய எண்ணக்கருவைப் பரந்த கருத்தில் விபரித்தல் இங்கு எதிர்பார்க்கப்படுகிறது தேவையான இடங்கள் அட்டவணைகள் வரைபுகள், பாடங்கள் பயன்படுத்தி விளக்கலாம். | உண்டு | உ+ம் குடிப்பரம்பலியல் உரு அட்டவணை இரட்டிப்புக் காலத்தைக் காட்டும் தரவுகள் என்பன வற்றைக் காட்டிலும் தங்கியிருப்போர் வீத அதிகரிப்பைக் காட்டவும் சனத்தொகைச் செய்திகளைப் பயன்படுத்தவும் வயோதிபர் தொகை அதிகரிப்பதால், அவர்களுக்கு அன்பு, பாதுகாப்பு, கவனிப்பு, வழங்குவதுடன் அவர்களின் ஆற்றல்களிலிருந்து பயன் பெறுவதும், அவற்றை மதித்தலும்.<br><br>சனத்தொகையும் குடும் வாழ்க்கக் கல்வியில் பாடப்பரப்பு 3.00 வாழ்க்கை நலன்கள் பத்திரத்தை இதற்காகப் பயன்படுத்தவும். |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விப்பாடப்பிரிவுகள் | சமூகக் கல்விப் பாடப் பிரிவுகள் | எண்ணக்கரு விபரங்கள் | இன்றைய நிலை | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 11 | 3.00 சனத்தொகையும் வாழ்க்கை நலன்கள் பற்றிய பிரச்சினைகள். உணவு இருப்பிடம் | தலைப்பு: அபிவிருத்தி உலகம்<br>11.1 உலக வளங்கள்<br>11.1.1 பொருளாதார வளங்கள் | உலகில் ஒவ்வொரு பிரசையும் சீரான வாழ்க்கையைக் கொண்டு நடந்த உணவு, உடை, இருப்பிடம், என்பன தேவை என்பதை வாழ்க்கை நலனை அடைவது பற்றிய அடிப்படையாக முன்னைய பாடத்தில் விளக்கியதை ஞாபகப்படுத்தி இவை எல்லோரிடையேயும் பரந்து காணப்பட வேண்டும் எனவும் மிகை நுகர்வு பற்றி எண்ணிப் பார்த்தல் உணவைப் பாதுகாத்து வைத்தல் உணவினைக் களஞ்சியப்படுத்தல் என்பவற்றைக் காட்டலாம். ஒவ்வொருவருக்கும் ஒரு இருப்பிடத்தைப் பெற்றுக் கொள்ளும் உரிமை இருப்பதை ஞாபகப்படுத்தலாம். | இல்லை | வாழ்க்கை நலன்களை அடைதலும் அதனோடு இணைந்த கூறுகளையும் ஒரு உரு மூலம் காட்டுவது நல்லது இக்கருத்தைத் தர்க்க ரீதியாக வரைவிலக் கணப்படுத்தி விளக்குதல் எதிர் பார்க்கப் படுகிறது.<br><br>பொருத்தமான வரைபு புள்ளி விபரக் குறிப்புக்கள் மூலம் விளக்கலாம். |
| 11 | 2.00 சனத்தொகை மாற்றம் | 11.2 அபிவிருத்தி | சனத்தொகையும் சனத்தொகை மாற்றம் பற்றிய எண்ணக்கருக்களை வரைவிலக் கணப்படுத்தல் எதிர்பார்க்கப்படுகிறது பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளமை சனத் தொகைத் தகவல் தொகுதி, சனத்தொகை கல்வி ஆசிரியர் கைநூல் என்பவற்றைப் பயன்படுத்தல்லாம். பிறப்பு, இறப்பு, பெயர்வு பற்றி விளக்கலாம். | இல்லை | |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விப்பாடப்பிரிவுகள் | சமூகக் கல்விப் பாடப் பிரிவுகள் | எண்ணக்கரு விபரங்கள் | இன்றைய நிலை | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | 2.01,2.11, 2.12 இலங்கை உலகம் தொடர்பாக சனத்தொகை நிலமைகளைக் காலத்துக்கு ஏற்ப பொருத்தமடையச் செய்தல் | 11.2.1 அபிவிருத்திக்கு ஏற்ப நாடுகளை வகைப்படுத்தல் | புதிய தகவல்களைப் பயன்படுத்தி இலங்கையினது உலகத்தினதும் சனத்தொகை நிலைமைகளைத் தெளிவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைந்து கொண்டு வருகின்றது என்பதற்கு உதவியாக அரச கொள்கைகள், வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் தெளிவுபடுத்தப்படுதல் எதிர்பார்க்கப்படுகின்றது. | இல்லை | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வியும் செயலமர்வின் போது வழங்கப்பட்ட இரு பிரசுரத்தை உபயோகிக்கவும் |
| 11 | 3.00 சனத்தொகை வாழ்க்கை நலன் பற்றிய பிரச்சினை<br>3.10 அபிவிருத்தி<br>3.11 குற்றங்களும், இளவயதினர் குற்றங்களும்<br>3.2 சனத்தொகை | 11.2.1.1 அபிவிருத்தியடைந்த அடைந்து வரும் நாடுகளின் நிலை<br>11.3 இலங்கையும் அபிவிருத்தியும்<br>11.3.2 குடித்தொகை | குற்றயியல்ளுக்கு ஏதுவான சமூக/பொருளாதாரக் காரணிகள் விளக்கப்படல் வேண்டும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிற் போன்றே அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் குற்றச் செயல்கள் நடைபெறுகின்றது. முயன்று காட்டப்படல், சனத்தொகை அதிகரிப்பு பற்றிய சனத்தொகை மாற்றம் பற்றிய எண்ணக்கருக்கள் தேவையான இடங்களில் தரவுகள் அளவிடுதல் வரைவிலக்கணப்படுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. | இல்லை | வாழ்க்கை நலனை அடைவதில் ஆன்மீகத் துறை பற்றியும் கவனம் செலுத்துகின்ற அவசியத்தை எடுத்துக் காட்டல் |
| 11 | 3.7 சுகாதாரமும் போஷாக்கும் | 11.4 இலங்கையில் அபிவிருத்தி<br>11.4.3 சுகாதார சேவைகள் | சுகாதாரமும் போஷணையும் எண்ணக் கருவை வரைவிலக்கணப்படுத்தல். தேவையான இடங்களில் அட்டவணைகள், வரைபு, உருவைப் பயன்படுத்தல். சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வியும் செயலமர்வில் வழங்கப்பட்ட இருபிரசுரம் மூலம் இவ்வெண்ணக்கருவை விளக்கலாம். | இல்லை | சுகாதார அமைச்சின் சனத்தொகைப் பிரிவு மூலம் வெளியிடப்பட்டுள்ள சனத்தொகை எண்ணக்கரு என்ற நூலை உபயோகிக்கவும் |

## 2.2 பாட உள்ளடக்கம் (விஞ்ஞானம்)

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விப்பாடப்பிரிவுகள் | விஞ்ஞான பாடப் பிரிவுகள் | எண்ணக்கரு விபரங்கள் | இன்றைய நிலை | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 8 | சனத்தொகையும் வாழ்க்கை நலனும் | | நிறையுணவின் தேவை அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் தரமான உணவு வேளையொன்றைப்பெறல் உணவைத் தெரிவு செய்யும் போது அதன் அளவு, பண்பு என்பன பற்றிக் கவனம் செலுத்துதல், குறைந்த விலையில் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய போஷாக்கு என்பன ஒரு உணவு வேலையைத் தெரிவு செய்யும் திறனை அறிவுறுத்தல். | இல்லை | தேசிய கல்வி நிறுவனத்தின் மூலம் வழங்கப்படுகின்ற "போஷாக்கு" கைநூலை உபயோகிக்கவும். |
| 08 | சனத்தொகையும் வாழ்க்கை நலனும்<br>3.02 உணவு<br>3.08 சுற்றாடல் | 8.05 எமது உணவு<br>8.11 மனிதனும் சுற்றாடலும் | மனிதனுக்கும் சுற்றாடலுக்குமிடையே நிலவும் இடைத் தொடர்பு, மனித நடவடிக்கைகள் மூலம் காடுகள் அழிக்கப்பட்டமை. சனத்தொகை வளர்ச்சி நீர் வளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியமை சுற்றாடலைப் பாதுகாப்பதன் மூலம் வாழ்க்கை நலனைப் பேணுவதில் கவனம் செலுத்துதல் | | பாலியல் நோய்கள் |
| 10<br><br>11 | இன்றைய சமூகத்தில் குடும்பம்.<br><br>5.02 இனப்பெருக்கத் தொகுதி | 11.65 மனிதனின் இனப் பெருக்கம் | சனத்தொகை அதிகரிக்கும் போது, உணவு, உறையுள் பற்றிய பிரச்சினை தோன்றுதல் நகராக்கத்தின் விளைவு, தொழில் நுட்ப முன்னேற்றத்தின் விளைவு.<br>மனித இனப்பெருக்கத் தொகுதியின் அமைப்பு மனித இனப்பெருக்கத் தொகுதியின் செயற்பாடு பற்றி மனித சமூகத்தில் இருந்த மூட நம்பிக்கைகள், இனப் பெருக்க உறுப்புகளை சுயமாகச் | | |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்விப்பாடப்பிரிவுகள் | விஞ்ஞான பாடப் பிரிவுகள் | எண்ணக்கரு விபரங்கள் | இன்றைய நிலை | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | சுத்தமாக வைத்திருப்பது பற்றி கவனம் செலுத்தப்படல் அதன் முக்கியத்துவம் தெளிவு படுத்தப்படல் | | |
| | 5.03 கர்ப்பிணி நிலை | 11.65 மனித இனப் பெருக்கம் | கருச்சிதைவுக்கான காரணங்கள், சுரப்பிகளின் செயற்பாட்டில் சீர்கேடு, பலவீனமான கருக்கட்டல்கள், கர்ப்பிணித் தாய் அதிக இளைப்புக்குட்படுதல், தாயின் உடலில் ஏற்படும் உடல் மாற்றங்கள் செயற்கைக் கருச்சிதைவுகளின் போது நிகழும் ஆபத்துக்கள் போன்ற விடயங்களில் கவனஞ் செலுத்தப்படல், இயற்கை வட்டம் பாதிப்புறுவது நவீன தொழில்நுட்பம், நகராக்கம் இயற்கை குழப்பமடைதல். | | |
| | 2.00 சனத்தொகை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் | 11.10 இயற்கை | சனத் தொகை வளர்ச்சிக்கு<br>- கருவள காலம்<br>- மரணிக்கும் வாய்ப்பு<br>- குடிபெயர்ப்பு<br>பாதிப்புச் செலுத்தும் வீதம்<br>சனத்தொகைக்கும் வாழ்க்கை நலனுக்குமிடையிலான இடைத் தொடர்பு<br>உணவு<br>சுகாதாரம்<br>போஷாக்கு<br>உறையுள்<br>சுற்றாடல்<br>வளங்கள் போன்ற காரணிகள் வாழ்க்கைநலனில் செல்வாக்குச் செலுத்தும் விதம் | | இந்நோய்களிலிருந்து விலகியிருக்கும் ஆற்றலை வழங்கி இந்நோக்கத்துடன் தலையான விடயங்களில் கவனம் செலுத்துதல் |
| | 6.00 கட்டிளமை 6.022 போதைப் பொருள் உபயோகம்<br>பாலியல் நோய் /ஏய்ட்ஸ் | 11.68 சமூக நோய்கள் | பாலியல் நோய்கள் அறிமுகம்<br>தொற்றும் விதம்/ தொற்றாதிருக்கும்விதம்<br>பரவுதலைத் தடுத்தலில் முக்கியத்துவம் | | |

## 2. 3 பாடத்திட்டமும் உள்ளடக்க வேண்டிய பகுதிகள் (சுகாதாரம்)

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வி பாடப்பிரிவுகள் | சுகாதார பாடத்திட்ட பகுதிகள் | தற்போதைய நிலை | உரிய எண்ணக் கருக்களின் விளக்கமும் உள்ளடக்கமும் |
|---|---|---|---|---|
| 6 | அலகு 3.00<br>சனத்தொகையும் வாழ்க்கை நலனும் பற்றிய எண்ணக்கரு | வாழ்க்கை நலன் என்ற தலைப்புக்குட்படும்<br>6.1.3 மனித உடற் சுகாதாரம் அலகுடன் தொடர்புபடுத்த முடியும். | இடம்பெறவில்லை. | வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமைய சுகாதார நிலை முக்கியம்<br>அதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய காரணிகள்<br>* உள<br>* உடல்<br>* சுற்றாடல்<br>* சமூக<br>என்று காட்டலாம். |
| 7 | | வாழ்க்கை நலன்கள் என்ற தலைப்பில் நோய்களும் அதற்கான பரிகாரங்களும்<br>7.6 அலகுகளுடன் தொடர்பு படுத்தலாம். | இடம்பெறவில்லை. | பல்வேறு நோய்களுக்குட்படுவதால் வாழ்க்கை நலன் குறிக்கப்படுகின்றது. நோய்களைக் கட்டுப்படுத்தி வாழ்க்கை நலனை விருத்தி செய்வதற்காக எம்மீது பல பொறுப்புக்கள் உண்டு. சுற்றாடலில் வாழும் ஒவ்வொருவரதும் சுகாதாரம் மற்ற ஒவ்வொருவரினதும் செல்வாக்குச் செலுத்து கின்றமையால் ஒவ்வொருவரின் வாழ்க்கை நலன் மீதும் அத்தகைய இடைத் தொடர்பைக் கொண்டது. |
| 8 | | 'வாழ்க்கை நலன்' குடும்பம் 8.7 என்ற அலகுடன் தொடர்புபடுத்த முடியும். | இடம்பெறவில்லை. | குடும்பத்தின் ஒரு பொறுப்பு<br>குடும்ப அங்கத்தவர்களின் வாழ்க்கை நலன் மீது கவனம் செலுத்துதல்<br>உள, உடல், சுற்றாடல் சமூக, ஆன்மீக என்ற ரீதியில் |
| | அலகு, குடும்பம் 4.00 | மனித உடல் சுகாதாரம் என்ற தலைப்புடன் தொடர்புபடுத்தல் | இடம்பெறவில்லை. | வாழ்க்கை நலன் மீது பாதிப்புச் செலுத்தும் எல்லாக் காரணிகள் பற்றியும் கவனம் செலுத்தும் மனப்பாங்கை குடும் உறுப்பினர்களிடையே ஏற்படுத்த வேண்டும். |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வி பாடப்பிரிவுகள் | சுகாதார பாடத்திட்ட பகுதிகள் | தற்போதைய நிலை | உரிய எண்ணக் கருக்களின் விளக்கமும் உள்ளடக்கமும் |
|---|---|---|---|---|
| 8 | | 6.1 குடும்பம் என்ற எண்ணக் கருவை உட்படுத்தல்<br>நோய்க் கட்டுப்பாட்டுக்கு 7-6 அலகுடன் இணைந்து, குடுபத்தின் கடமைகளை உட்படுத்தல் | இடம்பெறவில்லை | ஒரு குடும்பத்தில் சில அமைப்புகளை ஏற்படுத்துவதிலும் வாழ்க்கை நலனில் கொள்ளும் அக்கறை முக்கிய மானதாகும்.<br><br>சுகாதாரத்துக்குரிய காரணிகளைப் பெற்றுக் கொள்ளல் குடும்பம் என்ற அலகினை நிறைவேற்றப்பட முடியும்.<br>உ+ம் உணவு<br>புதிய நச்சுத்தன்மையற்ற<br>போஷாக்குள்ள<br>திருப்தி<br>தூய்மை<br>பாதுகாப்பு<br>வசதி<br>நோய்த்தடுப்பு போன்ற |
| | | 8.7 என்ற குடும்ப சுகாதாரம் என்ற அலகுடன் தொடர்பு படுத்தி பின்வரும் உப அலகுகள் சேர்க்கப்படு கின்றன. | குடும்ப சுகாதாரம் 8.7என்ற அலகின் கீழ் பல அலகு கள் உண்டு | |
| | | குடும்ப வட்டம், முதியோரைப் பரா மரித்தல் குடும்ப உறுப்பினர் களிடையே இடைத் தொடர்பு<br><br>பாகுபாடற்ற சமஉரிமை | 8.7.2 அலகில் திரு மணம், இனப் பெருக்கம் உண்டு. திருமண வகைகள் நன்மை தீமை போன்ற விடயங் கள் இதன் கீழ் வரும் | நோய்த்தடுப்புக்கு உதவும்<br>* சுத்தமான உணவு<br>* சூழற் சுகாதாரம்<br>* சரியான பழக்க வழக்கங்கள்<br>* ஆபத்திலிருந்து பாதுகாப்பு<br>* சரியான வைத்தியப் பரிகாரம்<br>ஆலோசனைகள்<br>போன்ற வியடங்கள் தொடர்பில் குடும்பத்தின் பொறுப்பு |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வி பாடப்பிரிவுகள் | சுகாதார பாடத்திட்ட பகுதிகள் | தற்போதைய நிலை | உரிய எண்ணக் கருக்களின் விளக்கமும் உள்ளடக்கமும் |
| --- | --- | --- | --- | --- |
| 8 | | | | (1) ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு கட்டத்தைக் கடந்து செல்லும்.<br>உதாரணமாக<br>* குழந்தைகள் உள்ள சந்தர்ப்பம்<br>* முன்பள்ளிப் பிள்ளைகள் என்ற நிலமை<br>* பாடசாலை செல்லும் பிள்ளைகள் இருக்கும் சந்தர்ப்பம்<br>* இளவயது பிள்ளைகள் என்ற சந்தர்ப்பம்<br>இத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்குகேற்ப குடும்பங்களின் செயற்பாடுகளும், பொறுப்புகளும், பணிகளும் வேறுபடுகின்றன.<br><br>2) முதியோரைப் பராமரித்தல் குடும்பத்தின் ஒரு பொறுப்பாகும். முதியோருக்குத் தேவையான உடலியற் தேவைகளை வழங்கல், உளவியல், சமூகத் தேவைகளை வழங்குதல். குடும்பத்தில் சிறியோருக்கு இது பற்றிய சாதகமான எண்ணக் கருவை ஏற்படுத்தவதும் குடும்பத்தினூடாக நடைபெற வேண்டியதே குடும்பத்தில் உள்ள தந்தை, தாய், மகள், மகன், என்ற உறுப்பினர்களுக்கு சிறப்பான கடமைப்பங்குகள் இருப்பினும் அவை அவர்களின் மூலமே கட்டாயம் நடைபெற வேண்டும் என்று குடும்பங்களின் எதிர் பார்க்க முடியாது.<br>உதாரணமாக :<br>சமைத்தல் வீட்டைச் சுத்தமாக வைத்திருத்தல் தாயின் பொறுப்பாக இருந்தப் படினும் ஏனையோரும் பகிர்ந்து கொள்ள வேண்டும். |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வி பாடப்பிரிவுகள் | சுகாதார பாடத்திட்ட பகுதிகள் | தற்போதைய நிலை | உரிய எண்ணக் கருக்களின் விளக்கமும் உள்ளடக்கமும் |
|---|---|---|---|---|
| 8 | அலகு 5.00 | திருமணம் மூலம் உருவாகும் ஒரு குடும்பத்தில் இனப்பெருக்கச் செயலொழுங்கு நிகழும் விதம் பற்றிய கருத்து உட்படுத்தப் பட்டுள்ளது. | இடம்பெற்றுள்ளது. | ஒரு குடும்பத்தில் மிக முக்கியமாக அமைவது உறுப்பினர்களிடையே நிலவும் தொடர்புகளாகும். தொடர்பு சீரானதெனின் கடமைப்பங்கு தொடர்பான பிரச்சினை எழாது. |
| | | துணையதுடன் தொடர்புபடுத்தி இனப் பெருக்கத் தொகுதி பற்றிய மேலும் விடயங்களை உறுதிப் படுத்துதல் | 6.12 மனித உடல் என்ற உப அலகில் இனப் பெருக்கத் தொகுதியின் உரு இடம் பெற்றுள்ளது. சுத்தம் பற்றியும் இடம் பெற்றுள்ளது. இடம்பெறவில்லை. | எமது கலாச்சாரத்தின் படி குடும்பத்தின் தலைமைத்துவம் ஆணுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய தலைமைத் துவத்தை ஏற்பது குடும்பத்தின் வளர்ச்சிக்கு ஏதுவாகிறது. எனினும் வளங்களை அனுபவிப்பதில் அல்லது வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதில் ஆண் பெண் தேவைகள் சகலரினதும் தேவைகள் நிறைவேற்றப்படுவது சகலரின் பொறுப்புமாகும். |
| | அலகு, இனப்பெருக்கத் தொகுதி 5 | புதிய அலகாக உட்படுத்தலாம். 7.6 அலகின் கீழ் மற்றும் உப அலகும் உள்ளது. இதில் இனப் பெருக்கத் தொகுதியின் பிரச்சினைகள் பற்றி ஆராய்க. இதில் இனப் பெருக்கத் தொகுதியின் பிரச்சினைகள் பற்றி ஆராய்தல் | 8.7 அலகின் கீழ் ஒரு உப அலகாக இடம் பெறும் | இதன்படி குடும்பத்தின் தந்தையின் போன்றே தாயினதும் உணவு, சுகாதாரம், ஓய்வு போன்ற தேவைகளைக் கவனித்தலும், அவரின் பணிகளை மதித்தலும், என்பவற்றின் குடும்ப உறுப்பினர்கள் ஈடுபடும் நிலை எமது கலாச்சாரத்தின் ஓர் அம்சமாக உள்ளன. |
| | | இளமைப் பருவத்தினர் தேவைகளும், இயல்பு ஆற்றல்களும் | 8.7 அலகின் உப அலகாக இடம் பெறும். | திருமணத்தின் ஒரு பணி யாதெனில் ஒரு நிரந்தரமான குடும்ப அமைப்பின் கீழ் இனப்பெருக்கச் செயலொழுங்கை நடத்தி குழந்தைகளை வளர்ப்பதாகும். |
| | | ஏய்ட்ஸ் என்ற உப அலகு சேர்க்கப் பட்டுள்ளது. | | |

| ஆண்டு | சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வி பாடப்பிரிவுகள் | சுகாதார பாடத்திட்ட பகுதிகள் | தற்போதைய நிலை | உரிய எண்ணக் கருக்களின் விளக்கமும் உள்ளடக்கமும் |
|---|---|---|---|---|
| 8 | | * முன்னைய, பின்னைய பிறப்புகளைப் பாதுகாத்தல்<br>* தாய்ப்பாலூட்டல்<br>* தாய் சேய் நலன்கள்<br>என்ற உப அலகுகள் சேர்க்கப் பட்டுள்ளன. | | (2) அப்போது பெற்றோரின் பணிகளை பொறுப்புடன் நிறைவேற்ற முடிகின்றது.<br>(3) பாலியற் தொடர்பு கொள்வதை திருமணம் வரை பிந்தவைப்பதும் திருமணத்தின் பின்பும் கூட அதனை விவாகமானவருடன் மட்டும் வைத்துக் கொள்வதும் பற்றிக் கவனஞ் செலுத்த வேண்டும்.<br>சுத்தமாக உள்ளாடை, பருத்தி உள்ளாடை, கருவைச் சுத்தப்படுத்தல், உள்ளாடையைத் தினமும் மாற்றுதல் முக்கியமானவையாகும்.<br>இத்தொகுதி தொடர்பான நோய்கள் ஏற்படலாம். பாலியல் நோய்கள் ஒருவகை. இத்தகைய இடர்களைத் தவிர்க்கும் ஆற்றலும் எம்மிடையே உண்டு.<br>கட்டிளமை தொடர்பான சாதககமான மனப்பாங்கை ஏற்படுத்தல் தொடர்பான விடயங்கள்<br>ஏயிட்ஸ் இன்று பரவும் கொடிய நோயாக இருப்பது<br>ஏயிட்ஸ் ஒழிப்புக்கு குடும்பநிலை அமைப்பே முக்கியம்<br>பாலியற் தொடர்பை தன்னுடைய கணவன்/ மனைவியுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளல் |
| 8 | | | | பெண் பிள்ளைகள் போஷணை குறித்து இனவிருத்தி கவனித்தல் தாய்ப்பாலூட்டுவதற்கான ஆயத்தம், சிகிச்சை நிலையம் செல்வதும் ஆலோசனைகளைப் பின்பற்றல் தாய்ப்பாலூட்டுவதற்கான உள உடல், நிலை முதல் மூன்று மாதத்தில் தாய்ப்பால் மட்டும் ஊட்டல், அன்புத் தேவை, மேலதிக உணவுக்குப் பழக்குதல், தாயின் ஓய்வு போஷாக்குத் தேவை பற்றி தந்தை தேடிப்பார்த்தல், பின்பற்றிப் பிள்ளையின் உணவுப் பழக்கம், நோய்த்தடுப்பூசி, உள, உடற் தேவைகள். |

## 3.00 இனப்பெருக்க சுகாதாரம் கற்பித்தலுக்கான உபயோகிக்கக் கூடிய உருக்கள்

## 3.1 பெண்ணின் இனப்பெருக்கத் தொகுதி

1. வயிற்றின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ளது


2. இரண்டு சூலகங்கள் உண்டு. இரண்டு மாதவிடாய்க்குட்பட்ட கால இடைவெளியில் அதிலொன்றிலிருந்து ஒரு முட்டை உற்பத்தியாகும். (சூலிடப்படுதல்)

3. சூலகக் கான்கள் இரண்டுண்டு. வெளியிடப்படும் முட்டை (சூல்) இதில் ஒரு கான் வழியாக கர்ப்பப்பையை அடையும்

4. கருப்பை : கருத்தரிக்கும் இடம்

5. யோனி : பெண்ணின் இனப்பெருக்க உறுப்பு வாயிலிருந்து கருப்பை வரையுள்ள வழி.

(1)



பலோப்பியன் கான்
(வெளித்தோற்றம்)
கருப்பைச் சுவர்
பலோப்பியன் கான்
(உட்தோற்றம்)
கருப்பை உட்பகுதி
வலது பக்க சூலகம்
கான்
புனல்
கழுத்து
இடது பக்க சூலகம்
(உட்புறத்தோற்றம்)
யோனி உட்தோற்றம்
யோனிமடல்

## 3.2 ஆணின் இனப்பெருக்கத் தொகுதி

1. விதைப்பைக்குள் அமைந்திருக்கும் ஒருசோடி விதைக்குள் சுக்கிலம் (விந்து) உற்பத்தியாகும்.


2. அப்பாற் செலுத்தியினூடாக விந்து கொண்டு செல்லப்படுவதுடன் அப்பாற் கொண்டு செலுத்தி சிறுநீர்வழியுடன் தொடர்பு படுகின்றது.

3. சுக்கிலம் ஏனைய சுரப்பிகளுடன் கலந்து விந்தைக் கக்கும்.

4. சேர்க்கையின் போது விந்து சிறுநீர்க்கானூடாக வெளியேறுவதுடன் அது யோனி மடலில் படியும்.

5. ஒரு தடவையில் 50 மிலியனுக்கு மேற்பட்ட கருக்களைக் கொண்டிருக்கும்.


(2)


சுக்கிலப் புட்டகம்
சிறுநீர்ப்பை
முன்னிற்கும் சுரப்பி
சிறுநீர்க் காள்
ஆண் குறி உள்ளமைப்பு
கூப்பரின் சுரப்பி
சுக்கிலக்கான்
சிறுநீர் நிணை கான்
விதை
விதைப்பை
ஆண் குறி முனை

## 3.3 கருக்கட்டல்

யோனிமடலில் படியும் விந்து கழுத்து வழியாக கருப்பைக்குள் நுழைந்து அங்கிருந்து பலோப்பியன் கான் ஊடாகச் செல்கிறது சூலகத்திலிருந்து வெளியேறும் முட்டை பலோப்பியன் கானில் இருப்பின் ஒரு சுக்கிலன் கரு அதனுடன் இணைந்து விடும்.

(3)




பலோப்பியன் கான்
கருப்பை
கருப்பைச் சுவர்
சூலகத்தில் நிற்கும் முட்டை
விந்தும் முட்டையும் இணைதல்
வெளியேறும் முட்டை
வலது
சூலகம்
சூலகம் உள்ளமைப்பு
யோனி உட்தோற்றம்
யோனிமடல்
கருக்கட்டல்
சூலகம்
கரு

## 3.4 கருத்தரித்தல்

கருக்கட்டிய முட்டை கருப்பையை நோக்கிச் செல்லும் வழியில் கலங்களின் எண்ணிக்கை அதிகரித்து அளவில் பெருக்கும். உடனே அது கருப்பையின் எண்ரோமெட்றியமில் விரைவாக வளரும்


(4)


கருக்கொண்டு கர்ப்பப்பையை கரு முட்டை நகருதல்
பலோப்பியன் கான்
(வெளித்தோற்றம்)
கருப்பையின்
மிகை வளர்ச்சி
கருப்பை
பலோப்பியன் கான்
உள்ளக அந்தங்கள்
வலது சூலகம்
இடது சூலகம்
கருப்பைச் சுவர்
(எண்ரோமெட்ரியம்)
யோனி
யோனி மடல்

## 3.5 கருவளர்ச்சி

எண்ரோமெட்றியமில் ஒட்டியுள்ள கரு தாயிடம் இருந்து ஊட்டம் பெற்று வளர்ச்சியடைதல்

(6)





யா/வண நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

## 3.6 முளையத்தின் விருத்தி

உட் பதிக்கப்பட்ட கலங்கள் தொடர்ந்தும் தாயின் போஷாக்குப் பெற்று தொடர்ந்து வளரும்


(6)


கொப்புள் நாண்
சூல் வித்தகம்
எண்ரோமெட்ரியம்
முளையம்
கருப்பைச்
சுவர்
கருப்பைக்
குழி
யோனி
வெளித்துவாரம்
கொப்புள் நாண்
முளையம்
கருப்பைச்
சுவர்
யோனி
சூல் வித்தகம்
வெளித்துவாரம்
வாய் பொருள் நிரம்பிய
அமினியன் குழி

## 3.7 பிறப்பை அண்மித்த பருவம்

கருவின் தலை இவ்வாறு திரும்ப இருக்கும்

(7)




## 3.8 இயற்கைப் பிரவேசம்

யோனியின் ஊடாக பிள்ளையின் தலை முதலில் வெளிப்படும் நிலை இயற்கைப் பிரசவம் எனப்படும்

பொதுவாக 40 வாரங்களில் கரு வளர்ச்சி பூரணமடையும்.

(8)



## 4. சனத்தொகையும் வாழ்க்கைக் கல்வியும் தொடர்பாக பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தக் கூடிய துணையாக அமையக் கூடிய செயற்பாடுகள்

சனத் தொகையும் குடும்ப வாழ்க்கைகளுக்கென அறியப்பட்டுள்ள பாடப்பரப்புகள் சமூகக்கல்வி, சுகாதாரம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. வகுப்பறையில் நிகழும் முறைசார்க் கற்பித்தல் மூலம் வழங்கப்படும் இந்தக் கல்வியை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பாடசாலைக்குள்ளேயே இணைந்த பாடச் செயற்பாடாக, பாடத்துக்கு வெளியிலான, செயற்பாடாக பலவற்றை ஒழுங்கு செய்தல் பொருத்தமானது. அத்தகைய செயற்பாடுகள் மூலம் இத்தகையகற்பித்தலுக்கு மேலும் உறுதிப்பாடுடன் புதிய அர்த்தமும் கிடைப்பதுடன் வாழ்க்கையுடன் தொடர்பான செயன்முறைப்பங்குபற்றல் மூலம் மாணவர்களின் ஒத்துழைப்பைப் பெற முடியும். இத்தகைய செயற்பாடுகளை மாணவர்களை மையமாக வைத்து மட்டுமன்றி பெற்றோர்கள், சமூகம் என்பவற்றை மையமாகக் கொண்டும் ஏற்பாடு செய்யலாம். அத்துடன் இத்தகைய செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்காக சுகாதாரத் திணைக்களத்தின் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் உத்தியோகத்தவர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு பாடசாலையில் நடைமுறைப்படுத்தக் கூடிய இத்தகைய செயற்பாடுகளுக்கான சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன. இதன் படி தத்தமது பாடசாலைக்குப் பொருத்தமான செயற்பாட்டைத் தெரிந்து ஒழுங்கமைத்துக் கொள்வது பாடசாலையின் பொறுப்பாகும். இங்கு காட்டப்பட்டுள்ள பல செயற்பாடுகள் சுகாதார மற்றும் செயற்திட்டங்களில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்படுகின்றவை என்று எமது அனுபவமாகும்.

* பாடசாலைக் காலைக் கூட்டத்தின் போது வாரத்துக்கு ஒரு முறை அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை இக்கல்வியுடன் தொடர்புடைய ஒரு தலைப்பில் ஒரு சிறிய உரையை நிகழ்த்தல், இதனை ஒரு ஆசிரியர் அல்லது மாணவர் செய்யலாம்.
* இத்தலைப்புக்குப் பொருத்தமான கட்டுரை, ஓவியம் தீட்டுதலுக்கு சில தலைப்பு வழங்குதல், அத்தலைப்புக்களின் கீழ் கட்டுரை ஓவியம், சுவரொட்டிப் போட்டிகள் ஒழுங்கு செய்தல்
* சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வியும் பற்றிய ஒரு தகவல் நிலையமொன்றை, அல்லது சுவர்ப்பத்திரிகையை பாடசாலையில் ஆரம்பித்தல். இதனுடன் தொடர்பான தலைப்புகளிலான ஆக்கங்களையும், பத்திரிகைகளில் வரும் விடயங்களையும் இதன் மூலம் பரவச் செய்யலாம். இதனை மேற்கொள்வதற்காக ஒரு மாணவர் குழுவைத் தெரிவு செய்தல் அல்லது பாடசாலையில் ஒரு சுகாதாரக் கழகத்தை அல்லது சுகாதார வாரத்தை நடத்துவதன் மூலம் இதனை மேற்கொள்வது, சமூகக் கல்வி, விஞ்ஞானம் போன்ற பாடங்களை நடாத்தும் போதும் இத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ள முடியும்.
* பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டங்களில் அல்லது சமய விடுமுறை தினங்களின் போது சமயப் பொது இடங்களில் இது தொடர்பாக கருத்துக்களை அடிக்கடி தெரிவிக்க ஏற்பாடுகள் செய்தல் இவற்றின் போது வளவாட்களாக சுகாதாரப் பரிசோதகர் வைத்தியர்கள், சமயப் பெரியார்கள் பிரதேசத்தின் குறிப்பிடத்தக்க பெரியார்கள் இது தொடர்பான பயற்சி பெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள் போன்றோரைப் பயன்படுத்லாம்.
* சுகாதார வைத்திய அதிகாரி, மக்கள் வைத்திய நிபுணர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், தாதிமார்கள், குடும்ப சுகாதாரத் தாதிகள் போன்றோர் மூலம் வளர்ந்த மாணவர்கள் பிரச்சினைகளை கலந்துரையாடும் செயலமர்வுகள் ஏற்பாடு செய்தல், எழுத்து மூல வினாக்கள் பெற்றுக் கலந்துரையாட அல்லது நேர்முகங் கலந்துரையாடலில் ஈடுபட முடியும்.

# 5.00 மதிப்பீடு

சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வியும் பாடத்தை மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்களில் பின்வரும் விதத்திலான ஒன்றிணைந்த வினாப்பத்திரம் என்பன வழங்க ஏற்பாடு செய்வும்.

## 5.1 வினாப்பத்திரம் - வரலாறும் சமூகக் கல்வியும் I
(பல்தேர்வு வினாப்பத்திரம்)

**வினா :**

பின்வரும் அ.ஆ.இ. எழுத்துக் கூற்றின்கீழ் ஒரு சோடிக் கருத்துகள் உண்டு. அவற்றில் ஒன்று அதிகரிப்பு மற்றதைப் பாதிக்கும் வகையில் கவனித்து வினவப் பட்டிருக்கும் வினாக்களுக்கு பொருத்த மான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

அ. சனத்தொகை வளர்ச்சி வேகம்
சனத்தொகை இரட்டிப்புக் காலம்

ஆ. போஷாக்கின்மை
குழந்தைகளின் மரண எண்ணிக்கை

இ. ஒரு வைத்தியருக்கான சனத்தொகை அளவு
கர்ப்பணித்தாய் மரணம்.

**வினா 1 :**

இக்கருத்துக்கள் இரண்டில் முதலாவது அதிகரிக்கும் போது இரண்டிலும் அதிகரிப்பது பற்றிய கூற்று உள்ள விடை

(1) அ (2) ஆ
(3) இ (4) ஆ,இ

விடை : (4)

**வினா 2 :**

முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் வளர்ச்சிக்கு வழி வகுக்கும் நிலையைத் தெரிவிக்கும் கூற்று இடம் பெற்றுள்ள விடை

(1) அ (2) ஆ
(3) இ (4) அ.ஆ

விடை : 1

**(விளக்குதல்)**

சனத்தொகை வளர்ச்சி வேகம் என்பது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சனத்தொகை மாற்றமுறும் (அதிகரிப்பு, குறைவு) வேகமாகும். பெரும்பாலும் அது சனத்தொகை அதிகரிப்பு வீதம் என்ற பெயரால் அளக்கப்படுகிறது. ஒரு பிரதேசத்தின் சனத்தொகை வேகமாக வளர்ச்சியடையின் அங்கு சனத்தொகை இரட்டிப்படைய எடுக்கும் காலம் குறையும். சனத்தொகை இரட்டிக்க எடுக்கும் காலத்தைக் கணிப்பதற்கு

$$\frac{\text{சனத்தொகை இரட்டிப்புக் காலம்}}{\text{சனத்தொகை வளர்ச்சி வீதம்}} = 70$$

தாய் மரண வீதம் என்பது பிரசவத்தின் போது அல்லது அதனுடன் தொடர்பான நோய்களினால் ஏற்படும் மரணங்களாகும். தாய் மரணம் என்பது ஆயிரம் பிறப்புக்கு அல்லது ஒரு இலட்சத்துக்கு மேற் குறிப்பிட்ட காரணங்களால் இறக்கும் தாய்மார்களின் தொகையாகும். கர்ப்பக் காலத்தில் வைத்தியரைக் கொண்டு பரிசோதித்தல் மிக முக்கியமானதாகும்.

சகல பிரசவத்தின் போது ஒரு வைத்தியரின் சேவை கட்டாயம் இல்லை என்றிருந்தாலும் பிரசவம் தொடர்பான இடர்பாடுகளின் போது வைத்தியரின் சேவையை நாடுவது கட்டாயமாகும்.

## வினாப்பத்திரம் - வரலாறும் சமூகக் கல்வியும் II

**வினா :**

ஒரு அபிவிருத்தியடைந்து வரும் நாடாயினும் பிறப்பும் ஆயுள் எதிர் பார்ப்புத் தரவுகளின் படி இலங்கை மிக நெருக்கமாக இருப்பது அபிவிருத்தி யடைந்த நாடுகளுடனாகும். இதற்கான இரண்டு காரணங்களை விளக்குக.

**விடை :**

பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு என்று ஒரு குழந்தை பிறக்கும் வேளையில் காணப்படும் மரண வீதத்தை அடிப்படையாகக் கொண்டு அக்குழந்தை வாழும் என எதிர் பார்க்கப்படும் ஆண்டுகளின் எண்ணிக்கையாகும். உலகில் பல நாடுகளின் ஆயுள் எதிர்பார்ப்பு பரீட்சிக்கப்பட்டதில் தெரிய வரும் ஒரு விடயம் யாதெனில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் ஆயுள் எதிர்பார்ப்பு உயர்ந்த மட்டத்தில் இருப்பதும், அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளின் மட்டம் குறைவாக இருப்பதுமாகும். எவ்வாறா யினும் அண்மைக்காலத்தில் இலங்கையின் பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்புப் பெறுமானம் அதிகரித்துள்ளதுடன் இவ்வியல்பில் இலங்கை அபிவிருத்தி யடைந்த நாடுகளைப் பெரிதும் ஒத்திருக்கிறது.


பிறப்பு/ ஆயுள் எதிர் பார்பபு அதிகப் பெறுமானம் பெறுவதற்கு மரண வீதம் குறிப்பாக சிசு மரண வீதம் குறைவாக இருக்க வேண்டும். இலங்கையில் மரண வீதம் குறைவதற்கு பல காரணங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அதில் முக்கியமானது சில பின்வருமாறு

மலேரியா நோய் தடுக்கப்பட்டமை
சுகாதார சேவைகளின் முன்னேற்றம்
நலன்புரிச் சேவைகள் அதிகரிப்பு
கல்வி நிலை
குறிப்பாக பெண்களின் கல்வி நிலை அதிகரித்தமை

1947 இல் இலங்கையின் சிசு மரண வீதம் ஆயிரத்துக்கு 14.7 அளவுக்குக் குறை வடையக் காரணம் டி.டி.ரீ மருந்து தெளித்தமை மூலம் மலேரியா நோய் தடுக்கப்பட்டமையாகும். மேலும் வேறு நாடுகளில் ஏற்படும் வைத்திய முன்னேற்றம் குறுகிய காலத்தில் இலங்கையருக்கும் கிடைக்கும் நிலையும் இலங்கையின் மரண வீதம் குறைந்தமையிற் பாதிப்புச் செலுத்திய காரணியாகும். உணவுற்பத்தி விநியோகம் என்பவற்றில் ஏற்பட்ட முன்னேற்றமும், மக்களின் போஷாக்கு விருத்தியடைய ஏதுவாயிற்று. மரண வீதம் குறைந்ததில் கல்விக்கும் கணிசமான பங்குண்டு. இலவசக் கல்வி இலங்கையின் எழுத்தறிவு வீதத்தை உயர்த்தக் காரணமாய் அமைந்தது. கல்வி நிலை உயர்வடைந்தமை மரண வீதம் குறைவுக்கு இன்னொரு காரணமாக அமைந்தது.

## 5.2 வினாப்பத்திரம் விஞ்ஞானம்

கீழேயுள்ள பாடத்திட்டத்தில் பெண்ணின் இனப்பெருக்கத் தொகுதி காட்டப்பட்டுள்ளது.




(1) (அ) இதில் உள்ள ABC என்பதைப் பெயரிடவும்

(ஆ) ABC என்ற பகுதிகள் முக்கிய பணிகள் யாது?

(இ) ஒரு அத்தியாவசியத்தின் போது மேற் கொள்ளப்படும் ஒரு சத்திர சிகிச்சையில் B எந்த இடத்தில் வெட்டப் படுகிறது. இந்த சத்திர சிகிச்சை மூலம் எதிர் பார்க்கப்படுவது யாது


(ஈ) மேற்கூறிய (இ)யில் குறிப் பிட்பட சத்திர சிகிச்சையின் பின் உற்பத்தியாகும் முட்டை களுக்கு என்ன நடை பெறுகின்றது.

(2) ஆணின் இனப்பெருக்கத் தொகுதியில்

(அ) சுக்கில உற்பத்தி அமைப்பையும்

(ஆ) சுக்கிலம் தற்காலிகமாக சேர்த்து வைக்கப்படும் அமைப்பையும் பெயரிடுக.

(3) பெண்களிடமிருந்து பெற்ற ஒரு மாதிரியின் மாதவிடாய்க் கால எல்லை பற்றிச் செய்யப்பட்ட ஆய்வு வரைதலில் தரப்பட்டுள்ளது.




(அ) இவ்வாய்வு முடிவுகளின் படி அதிகமான பெண்கள் உள்ள மாதவிடாய் வட்டக் காலம் யாது?

(ஆ) மாதவிடாய் வட்டக் கால எல்லை 30 நாட்களை விட அதிகமாகவுள்ள பெண்கள் இம்மாதிரியில் எத்தனை பேர்.

(இ) இவ்வாய்வுக்குட்படுத்த முடியாத பெண்கள் வகை ஒன்றைக் குறிப்பிடுக.

(4) கர்ப்பிணித்தாய்மாருக்கு சிகிச்சை களின் போது கல்சியம் இரும்புச் சத்து, அதிகமாகவுள்ள மருந்துகள் வழங்கப்படுகின்றன. அவை ஏன் தேவைப்படுகின்றன.

## 6.00 பிரதேசச் செயலமர்வுகள் நடாத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

* பாடப்பரப்புக்குரிய அறிவைப் புதுப்பிக்க வேண்டும்.

* இக்கல்வி பற்றிய சாதகமான மனப்பாங்கை ஆசிரியர்களிடத்தில் ஏற்படுத்துவது பற்றிக் கவனம் எடுத்தல் வேண்டும்.

* இக்கல்விக்குரிய, விடய ஆய்வு, பாத்திரப்படைப்பு, கலந்துரையாடல், ஆய்வு, வாழ்க்கைப் பருவங்கள் பற்றிய கலந்துரையாடல் போன்றன பொருத்தமான சில முறைகளாகும்.

* பங்கு பற்றுக் கற்பித்தல் முறைகளை இத்தகைய செயலமர்வுகளின் போது உபயோகித்து முன்னுதாரணமாக இருக்கவும்.

* இணைந்த பாட, அல்லது பாடத்துக்கு வெளியிலான இப்பாடத்துடன் தொடர்பான நிகழ்ச்சிகளை இப்பாடம் தொடர்பில் நடைமுறைப்படுத்த முயற்சிக்கவும்.

* குடும்ப வாழ்க்கைக் கல்வி பற்றி பெற்றோருக்கு அறிவுறுத்தல் முக்கியத்துவத்தை வலியுறுத்தலும்.

# 7.00 பாடத்திட்டம்

## சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வியும்

**நோக்கங்கள்**

* குடிப்பரம்பலின் அடிப்படை எண்ணக் கருக்களை விளக்குவர்
* சனத்தொகை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குவர்.
* சனத்தொகை மாற்றம் சமூகத்தைப் பாதிக்கும் விதத்தை விளக்கிக் கொள்வார்.
* நிலைத்திருக்கும் குடித்தொகையைக் கொண்டு நடத்தும் அவசியத்தை மதிப்பீடுவர்.
* சனத்தொகைக்கும் வாழ்க்கை நலனுக்குமிடையேயுள்ள தொடர்பை விளக்குவர்.
* குடும்ப அலகின் பணியையும் பொறுப்பையும் விளங்குவர்.
* சமூக விருத்திக்கு நிரந்தரக் குடும்ப அமைப்பின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பர்.
* பெற்றோரின் முக்கியத்தவத்தையும் பொறுப்பையும் மதிப்பர்.
* இனப்பெருக்கத்தினதும், கர்ப்பிணித் தன்மையினதும் தன்மைகளை விளங்குவர்.
* கட்டிளமைப்பருவ மாற்றல்கள், சவால்களை எதிர் நோக்கும் திறன் என்பன விருத்தி செய்வர்.
* இலங்கைச் சமூகத்தின் நிலைப்பாடு, சமநிலை என்பவற்றுக்கு அவசியமான மனப்பாங்கு, திறன் என்பவற்றினை விருத்தி செய்து கொள்வர்.

## சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைக் கல்வியும்
### பாடத்திட்ட (6-11 ஆண்டு)

**1. குடிப்பரப்பலின அடிப்படை எண்ணக்கரு**

1.2 அளவு, அமைப்பு, இணைப்பு
1.3 பரம்பலும், செறிவும்
1.4 பிறப்பு வீதம் இறப்பு வீதம்
1.5 இயற்கை அதிகரிப்பு
1.7 குடிபெயர்வு
1.7 வளர்ச்சி வேகம்
1.8 இரட்டிப்புக் காலம்
1.9 தங்கியிருப்போர் வீதம்
1.10 வயோதிபமடைதல்

**2. சனத்தொகை மாற்றம்**

2.1 சனத்தொகை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்
  2.1.1 கருவள காலம்
  2.1.2 பிறப்பு
  2.1.3 இடம் பெயர்வு
2.2 சனத்தொகை நிலை
  2.2.1 இலங்கை
  2.2.2 உலகம்

**3. சனத்தொகையும் வாழ்க்கை நலனும்**

3.1 வாழ்க்கை நலன் எண்ணக்கரு
  3.1.1 உணவு
  3.1.2 உறையுள்
  3.1.3 சேவைகள்
  3.1.4 வேலைவாய்ப்பு
  3.1.6 சுகாதாரமும் போஷாக்கும்

3.2 சுற்றாடல்
3.3 வளங்கள்
3.4 அபிவிருத்தி
3.5 நீதி, நியாயம், குற்றச் செயல் இளவயதுக்குற்றங்கள்

**4. குடும்ப அலகு**

4.1 குடும்ப அலகு எண்ணக்கரு
4.2 கரு, கூட்டு, குடும்பங்கள்
4.3 ஒரு குடும்பத்தின் பணிகள்
  4.3.1 பொருளாதார
  4.7.2 சமூக
  4.3.3 கல்வி
  4.3.4 உளவியல்

4.4 குடும்ப உறுப்பினர் கடமைகளும் பொறுப்புகளும்
  4.4.1 குடும்ப அமைப்பு
  4.4.2 ஆண் பெண் நீதி
  4.4.3 குடும்பத்தில் இடைத் தொடர்பு
  4.4.4 வயோதிபரைக் கவனித்தல்.

4.5 இன்றைய குடும்பமும் சமூகமும்
  4.5.1 சவால்கள்
  4.5.1.2 சமூக
  4.5.1.2 பொருளாதார
  4.5.1.3 சுற்றாடல்

**5. கட்டிளமை**

5.1 கட்டிளமைப்பருவம்
  5.1.1 வளர்ச்சி உள, உடல், சமூக
  5.1.2 கட்டிளமையின் இயல்பும் உள்ளார்ந்த திறன்களும்
  5.1.3 கட்டிளமைப்பருவத் தேவைகளும் பொறுப்புகளும்

5.2 இனப்பெருக்கத் தொகுதி
  5.2.1 அமைப்புப் பணிகளும்
  5.2.2 சுயசுத்தம்
  5.2.3 மூடநம்பிக்கள்

5.3 இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்
  5.3.1 வளர்ச்சி தொடர்பான பிரச்சினைகள்
  5.3.2 போதைப் பொருட்கள் உபயோகம்
  5.3.3 பாலியல் நோய்கள்/ எயிட்ஸ்
  5.3..4 இளைஞர் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சேவையாற்றும் நிறுவனங்கள்

**6. பொறுப்புள்ள பெற்றோர்.**

6.1 திருமணம்
  6.1.1 திருமணம் வகைகள்
  6.1.2 திருமணத்தின் நன்மைகள்
    6.1.2.1 உளவியல்
    6.1.2.2 சமூக கலாச்சார
    6.1.2.3 கலாச்சாரத் தொடர்புகள்
    6.1.2.34 சட்ட ரீதியிலான பொறுப்புகள்
    6.1.2.5 பொருளாதார நன்மைகள்
    6.1.2.6 பாலியல்/ இனப்பெருக்க நடைமுறைகள்

6.2 கர்ப்பமும் பெற்றோர் ஆதரவும்
  6.2.1 கர்ப்பிணி நிலை
  6.2.2 கர்ப்பிணி கால மாற்றங்கள்
  6.2.3 கர்ப்பிணி காலப் பிரச்சினைகள்
  6.2.4 முன், பின் பிரசவ கவனிப்பு
  6.3.5 தாய்ப்பால் ஊட்டல்
  6.3.6 தாய் சேய் தேவைகள்
  3.3.7 தந்தையின் பணியும் பொறுப்பும்
  3.3.8 முன்பள்ளி மாணவர்கள் பற்றிய கவனம்

யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

*PRINTED BY AJ PRINTS, DEHIWALA.*